Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 207

புதன்கிழமை 21 ஜூன் 2023

ஆனி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# அல்லைப்பிட்டியில் மனித எச்சங்கள்!

## குற்றப்பிரதேசமாக அறிவிப்பு இன்று அகழ்வுப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரப் பகுதியில், கிடங்கு ஒன்று வெட்டப்பட்ட நிலையில், அதற்குள் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

வீடொன்றுடன் இணைந்த கட்டுமானத் தேவைக்காகக் கிடங்கொன்றை வெட்டியபோதே இந்த மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. »15

# வலிகாமம் வடக்குப் பகுதியில் காணி அளவீடு தேவையற்றது!

## சுவீகரிக்கும் வர்த்தமானியை உடன் மீளப்பெறுக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தேவையற்றது. அந்தக் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் 2013ஆம் ஆண்டு வெளியிடப் »15

குருந்தூர்மலைக்குப் பயணம்

# எனது பாதுகாப்புக்கு அரசாங்கமே பொறுப்பு

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

பிவிதுறு ஹெல உறுமய அமைப்பைச் சேர்ந்த உதய கம்மன்பில 50 பேர் கொண்ட குழுவுடன் இன்று »15

# யாழில் இனி பாண் ரூ.150

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர் »15

தமிழர்களுக்கு எதிராக

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான்!

## அவுஸ்திரேலிய செனட்டர் கருத்து

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்னமும் நீதியென்பது அவர்களுக்குக் கிட்டவில்லை என்று அவுஸ்திரேலியாவின் கிறீன் கட்சியின் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்தார். »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோளம் அறுவடை முல்லையில் சிறப்பு

**முல்லைத்தீவு, ஜூன் 21**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை சோளம் அமோக விளைச்சலைத் தந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**


ஐ .எல். ஓ. செயற்றிட்டத்துகமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா, ஒட்டுசுட்டான் , முள்ளியவளை, உடையார்கட்டு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளால் சோளப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட சோளம் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

வெலிஓயா பகுதியில் 60 பயனாளிகளால் முன்னெடுக்கப்பட்ட சோளம் பயிர்ச்செய்கை அறுவடை நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர் யாமினி உள்ளிட்ட குழுவினர் அங்கு களப்பயணம் மேற்கொண்டு அறுவடை நிகழ்வில் பங்கேற்றனர். (ச-125)





# இறக்குமதி சிமெந்து வரி உயர்வு

கொழும்பு, ஜூன் 21

இறக்குமதி செய்யப்படும் சிமெந்துக்கு விதிக்கப்பட்டுள்ள வரி அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் செயற்கை நிறம் கொண்ட, நிறமற்ற வெள்ளை சிமெந்துக்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபா செஸ் வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

50 கிலோகிராம் மற்றும் அதற்கும் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய சிமெந்து ஒரு கிலோகிராமுக்கு விதிக்கப்படும் 5 ரூபா செஸ் வரி 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

50 கிலோகிராம் மற்றும் அதற்கு மேற்பட்ட பொதிகளில் மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் சிமெந்து ஒரு கிலோகிராமுக்கு அறவிடப்படும் 3 ரூபா வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2)



# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21

காக்கைதீவுப் பகுதியில் உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 27 மற்றும் 28 வயதான சந்தேகநபர்களிடமிருந்து 128 மில்லிகிராம் மற்றும் 180 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது குற்றத்தை சந்தேகநபர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து தண்டப்பணம் விதிக்கப்பட்டு இருவரும் விடுவிக்கப்பட்டனர். (ச-125)

# பண்டத்தரிப்பில் கண்புரை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவுசெய்யும் கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும்.

தெரிவுசெய்யப்படும் கண்புரை நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி3)

# மருத்துவர்கள் மோதல்

கொழும்பு, ஜூன் 21



ஒரே மருத்துவமனையில் கடமையாற்றும் இரு மருத்துவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோத லில் முடிவடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் மருத்துவமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. மோதலின்போது பலத்த காயங்களுக்குள்ளான மருத்துவர் அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# உடைமையில் கஞ்சா; இருவருக்கு மறியல்



யாழ்ப்பாணம், ஜூன் 21

2 கிலோவுக்கும் அதிகமாக கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பளை பொலிஸார் தெரிவித்தனர்.

பளையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொலிஸார் சுற்றுக்காவலில் ஈடுபட்டபோது இந்தக் கைது இடம்பெற்றது. 'பட்டா' ரக வாகனமொன்றை மறித்து சோதனையிட்டபோது மறைத்துவைக்கப்பட்ட நிலையில் சந்தேகநபர்களிடமிருந்து கஞ்சா பொதி மீட்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர், ஏற்கனவே கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்பட்டதையடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-26)

# 'சாதா' பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21

'சாதா' பாக்குடன் இளைஞர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞரை மறித்து சோதனையிட்டபோது அவரிடமிருந்து 'சாதா' போதைப்பாக்கு மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட 23 வயதான குறித்த இளைஞனை சட்டநடவடிக்கைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)


# ஜூன் 29 இல் ஹஜ் பெருநாள்

இலங்கையில் ஜூன் 29 ஆம் திகதி வியாழக்கிழமை புனித ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சமய கலாசார திணைக்களம், கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா பிறைக்குழு ஆகியன இணைந்து அறிவித்துள்ளன.

துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை, நாட்டின் சில பகுதிகளில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தென்பட்டது. அதற்கமைய 10 ஆம் நாளான எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3)

# நல்லிணக்கத்துக்காக யாழில் நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூன் 21




யாழ். மாவட்ட சர்வமதச் செயற்குழுவால் மத நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் நடைபவனியொன்று நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திலிருந்து காலை 8 மணியளவில் ஆரம்பமான இந்த நடைபவனி மருத்துவமனை முன்வீதியூடாக நூலகத்தை மீண்டும் வந்தடைந்தது.

நடைபவனியில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்தூராசா மற்றும் நான்கு மதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி மதகுருமார், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி3-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## கடவுச்சீட்டுக்கான கைவிரல் பதிவு

# பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேசசெயலகங்களில் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜூன் 21**

**கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



யாழ். மாவட்டத்தில் இந்த நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பிரதேச செயலகமும் சாவகச்சேரி பிரதேச செயலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன . பருத்தித்துறை பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளையில் உத்தியோகபூர்வமாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இணையத்தளமூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர் விண்ணப்பதாரிகளின் தொலைபேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும்.

குறுந்தகவலுக்கமைய பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளைக்குச் சென்று தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)

# இடைவிலகிய மாணவன் மீண்டும் பாடசாலைக்கு!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏற்பாடு

ஒரு வருடமாக பாடசாலைக்குச் செல்லாத மாணவன் ஒருவன் கண்டறியப்பட்ட நிலையில், அந்த மாணவன் பாடசாலைக்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் மேற்கொண்டுள்ளார்.

மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது தரம் 6 இல் கல்விபயிலும் மாணவன் கடந்த ஒரு வருடமாக பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மாணவனின் வீடுதேடிச் சென்று தடுப்பூசி ஏற்றியதுடன் மாணவனை பாடசாலைக்கு சமுகமளிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

அதேவேளை, பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவது அதிகரித்துள்ள நிலையில் அவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர். (ச-9)



# அத்துமீறிய குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒன்பது இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு அருகே நேற்றுமுன்தினம் இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது, ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகைக் கைப்பற்றியதுடன், அதிலிருந்த ஒன்பது மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் மேலுமொரு படகும் வெறுமையாக நெடுந்தீவில் கரை ஒதுங்கியது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# சோழர்கால கிணற்றிலிருந்து மக்களுக்குக் குடிதண்ணீர்

சாவகச்சேரி பேருந்து நிலையத்திலுள்ள சோழர்களால் அமைக்கப்பட்ட நன்னீர்க் கிணற்றை சுத்திகரித்து குடிதண்ணீர் வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

இந்தக் கிணறு சோழர்களால் அமைக்கப்பட்ட சிவன் கோயிலின் மூலஸ்தானத்து தீர்த்தக் கிணறு என ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய சின்னமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கிணற்றின் கட்டுமானங்களில் பாதிப்பை ஏற்படுத்தாமல் மக்களுக்கான குடிதண்ணீரை வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர் கலந்துரையாடலில் சம்மதம் தெரிவித்துள்ளனர். (ச-125)



கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மாதகல் கடற்படை அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் மாதகல் பிரதேச கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாதகல் கடற்படை முகாமில் நடைபெற்றது. (ச-ரி2, 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

**எ**ன்னதான் கோடீஸ்வரப்பிள்ளையா இருந்தாலும் பரமசிவன் கழுத்தில இருக்கிற பாம்போட பகைச்சால், கதை கந்தலாயிடும். அதுக்கு நல்ல உதாரணம், அமைச்சர் ஒராளின்ர கிளிநொச்சி மாவட்ட கைத்தடியா இருந்தவர்தான். ஒரு அறிவுஜீவியா, தேசியத்தில 'அடங்காப்பற்றோட' இருந்தவர் பதவியாசையால அமைச்சரின்ர அடிமாடானது பழைய கதை. அமைச்சரின்ர புண்ணியத்தில கம்பஸ் பேரவையில உறுப்பினர் பதவியும், கிளிநொச்சிக்கு அமைச்சரின்ர கைத்தடிப் பதவியும் கிடைச்சது. பதவி கிடைச்சதும் ஆள் கண்டபடி ஆடத்தொடங்கிட்டார்.

அதிலையும் கிளிநொச்சியின்ர அமைச்சர் எண்டமாதிரித்தான் அவற்றை போக்குவாக்கு எல்லாம் இருந்திச்சுது. கட்சியின்ர பழைய ஆக்களைக்கூட மதிக்கிறேலை. எல்லாத்துக்கும் தனக்குத்தான் மாலை, மரியாதை வேணுமெண்டு ஒற்றைக்காலில நிண்டிருக்கிறார். எங்க கூட்டம் நடந்தாலும் அழையாவிருந்தாளியா உள்ளுக்க புகுந்து, அங்க அதிகாரியளை விடவும் தானே கருத்துக் கந்தசாமியா மாறிடுவார். இதால எல்லாரும் உள்ளுக்க புகைஞ்சபடி, வெளியில ஆளோட சிரிச்சுக் கதைச்சுக் கொண்டிருந்தவை.

இப்பிடிப்பட்ட நிலையிலதான் கம்பஸ் பிரச்சினை ஒண்டு சம்பந்தமா, இந்தக் கைத்தடிகாரருக்கும் கட்சியில பரமசிவன் கழுத்துப் பாம்பு மாதிரி 'யோகத்தோட' இருக்கிற முன்னாள் மேயருக்கும் இடையில பிடுங்குப்பாடு வந்திட்டு. அந்தக் கொழுவலின்ர பலனா, கைத்தடிகாரரின்ர பேரவைப் பதவி பிடுங்குப்பட்டுது. அதுக்குப் பிறகாவது கொஞ்சம் வாலைச் சுருட்டிக் கொண்டு, கிளிநொச்சி ஏரியாக் கைத்தடியா லெவல் காட்டியிருக்கலாம். ஆனால் அதுக்கும் தன்ர தலையில தானே மண்ணள்ளிக் கொட்டிப்போட்டார்.

கிட்டடியில, கிளிநொச்சியில உள்ள பிரதேச செயலகங்களின்ர 'டிவிசன் டே' கூட்டங்கள் நடந்தது. அந்தக் கூட்டங்களில அதிகாரிகளுக்கு மட்டும் தான் அனுமதி, அரசியல்வாதியளுக்கு அனுமதியில்லை. ஆனால் பழக்க தோசத்தில இந்தக் கைத்தடிகாரரும் கதிரையில போய் குந்திட்டார். போய்ச் சும்மா இருக்காமல் தன்ர அட்வைஸ் மழையைப் பொழிஞ்சுதான் ஓஞ்சிருக்கிறார். அந்தக் கடுப்பிலதான் எல்லாரும் அமைச்சரிட்ட கைத்தடியைப் பற்றிக் கடுமையாப் போட்டுக் குடுத்திருக்கினம். போதாக்குறைக்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலையும், சுமந்திரன் எம்.பி. காற்றாலை விசயமா அமைச்சரோட கதைக் கேக்க, படாரெண்டு குறுக்க பாய்ஞ்சு கைத்தடி தான் கருத்துச் சொல்ல வெளிக்கிட்டுட்டார். 'நான் கேள்வி கேட்டது ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரை. அவர் அதுக்குப் பதில் சொல்லுவார். நான் அவற்ற உதவியாளோட கதைக்கேல்ல நீர் வாயைப் பொத்தும்' எண்டு சுமந்திரன் பதிலடி குடுக்கத்தான் கைத்தடி பம்மினாராம்.

பாவம், அண்டைக்குத்தான் அவரின்ர கடைசி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம். இப்பிடி எல்லா இடமும் ஆள் 'சீன்' போட்டதால அண்டைக்குப் பின்னேரமே பதவியைப் பிடுங்கி, குடுக்கவேணுமெண்டதுக்காக ஒரு 'டம்மிப்பதவி குடுத்திருக்காம். அதுக்குப் பிறகு கூட ஆள் அடங்கேலையாம் எண்டதுதான் பெரும்பகிடி. சீனாவில நடக்கிற யோகா தினத்துக்காக இலங்கையில 60 பேர் தனிப் பிளேனில போனவை. அதில வடக்கில 11 பேருக்கு அழைப்பு வந்தும், 6 பேர்தான் போனவை. போகாத ஆக்களுக்கு 'அங்க போகச் சொல்லி' கைத்தடிகாரர் கிட்டடியில கடுமையா வற்புறுத்தியிருக்கிறாராம். இப்பிடிப் பட்டும் திருந்ாதவையும் இருக்கத்தான் செய்யினம்.



- பட்சி

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொது அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2)

# வனவிலங்கு அதிகாரிகள் சித்திரவதை செய்தனர்

### ம.உரிமை ஆணைக்குழுவில் பொதுமகன் முறையீடு

**முல்லைத்தீவு, ஜூன் 21**

**வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளால் சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குட்பட்டதாக பொதுமகன் ஒருவர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.**

அந்த முறைப்பாட்டில்,

இலங்கை வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அதிரடிப்படையினர் நால்வர் எனது வீட்டுக்கு வலுக்கட்டாயமாக நுழைந்து வேட்டை இறைச்சி வைத்திருப்பதாக குற்றஞ்சுமத்தினர். ஆனால் அங்கு அப்படி ஏதுவும் இருக்கவில்லை.

பின்னர் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் சட்டவிரோதமாக தடுத்து வைத்து சித்திரவதை செய்தனர். தமது விசாரணைக்கு இடையூறு விளைத்ததாக தெரிவித்தும் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளை தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் என்னை முற்படுத்தினர்.

நீதிமன்று பிணையில் செல்ல அனுமதித்துள்ளது. தற்போது மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறேன் - என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

# பெண் பொருளாதார ஸ்திரம் செயற்றிட்டம் முல்லையில்



முல்லைத்தீவு, ஜூன் 21

ஐக்கிய நாடுகள்சபையின் பெண்கள் பிரிவால் பெண்களுக்கு அவசரகால நிவாரணக் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்ட பதில் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா பிரதேச செயலகத்துக்குட்பட்ட 120 பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பொருளாதார அபிவிருத்தியில் பெண்களை வலுவான நிலையில் வைத்திருக்கும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

தெரிவுசெய்யப்பட்டோருக்கு வாழ்வாதார உதவி மற்றும் சுகாதார உதவி, திறன்விருத்தி, வியாபார நுட்பங்களைக் கற்றுக்கொடுத்தல், இணையவழி வியாபார நடைமுறை நுட்பம் முதலான விடயங்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் பிரிவின் திட்ட அதிகாரி நெமானிகா அமரசிங்க, ஐக்கிய நாடுகள்சபை பெண்கள் பிரிவின் திட்ட அலுவலகர் பிரதீபா கலசேகர, முல்லைத்தீவு மாவட்ட உதவி மாவட்டச் செயலர் லிசோ கேகிதா, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர், வெலிஓயா பிரதே செயலக உதவி பிரதேச செயலாளர், பெண்கள் அபிவிருத்தி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2, 19)

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நடமாடும் சேவை இன்று புதன்கிழமை காலை நவீன சந்தைத் தொகுதியின் பிரதான நுழைவாயிலில் நடைபெறவுள்ளது.

14, 15 ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம், சோலை வரி, பெயர் மாற்ற விண்ணப்ப படிவம், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதன வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டின் ஆதன வரி போன்ற வற்றை பெற்று மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்தவுள்ளன.

நடப்பாண்டின் ஆதன வரியை முழுமையாக செலுத்துவதனூடாக மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான 5% கழிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி2,இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும்.

**மிதுனம் :** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்துக் காத்திருந்த சுபச் செய்தி ஒன்று கிடைக்கக்கூடும். மன வருத்தங்கள் நீங்கும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். ஆதாயம் உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பணியாளர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள்.


**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** அவப் பெயர் நீங்கும். நன்மைகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவை. ஆஞ்சநேயரை வழிபட நற்பலன்கள் கூடுதலாகும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவும்.



# ஆயுள்வேத சிகிச்சை சரசாலையில் ஆரம்பிப்பு

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை உப அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆயுள்வேத சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் வேண்டுகோளுக்கமைய இந்த சிகிச்சை நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 8 தொடக்கம் மாலை 4 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 8 தொடக்கம் மதியம் 12 மணி வரையும் இலவசமாக சுகாதார ஆலோசனையும் மருத்துவ சேவையும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3-9)

# மாதிரிச் சந்தை

கொடிகாமம், ஜூன் 21

கொடிகாமம் மக்கள்வங்கிக் கிளையின் அனுசரணையில் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் மாதிரிச் சந்தை நாளை வெள்ளிக்கிழமை அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ச-ரி2, 159)

# 'காட்டுப்பன்றி புராணம்' வவு.வில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

எஸ்.கிருபானந்தகுமாரன் எழுதிய 'காட்டுப்பன்றி புராணம்' நூல் வெளியீடு நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ச-இ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 21

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை மு.ப. 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-ரி.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அழிந்த கொல்லையில் மேயும் குதிரைகளும், கழுதைகளும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் வோல்கர் டேர்க் வலியுறுத்தியிருக்கின்றார். தற்போது நடைபெற்றுவரும் ஜெனிவா அமர்விலேயே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் நடந்த இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தினரால் நடத்தப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூறலுக்குட்படுத்தப்படவேண்டும் என்பது தமிழ்த் தரப்பின் கோரிக்கையாக இருக்கின்றது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தங்களுக்கான நீதியைப் பெற்றுத்தரும் என்று தமிழ் மக்கள் பெரிதும் நம்பியிருந்த போதும், அதிலும் அவர்களுக்கு ஏமாற்றமே எஞ்சியிருக்கின்றது.


இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012, 2013, 2014, 2015, 2017, 2019 மற்றும் 2021ம் ஆண்டுகளில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, உலக வல்லரசுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டபோதும், அவை எவையுமே இலங்கை அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொறுப்புக்கூறலுக்கான அடிப்படை நகர்வுகள்கூட இலங்கை அரசால் முன்னெடுக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை எல்லாமே வெறும் காகித அறிக்கைகளோடு முடிந்து போயின. இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களின் பின்புலத்தில் உலக வல்லரசான அமெரிக்கா பெரும்பங்காற்றியிருந்தது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதில் அமெரிக்காகூட இலங்கைக்குப் போதியளவு அழுத்தங்களை வழங்கவில்லை. இலங்கை தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில் உலக நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்திருக்கும் நிலையில், தமிழ் மக்களின் தீராப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையோ அமெரிக்காவோ பயன்படுத்திக் கொள்ளவில்லை அல்லது பயன்படுத்த விரும்பவில்லை.

தற்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் ஐ.நா. வின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது என்று கூறப்படும் நிலையில்தான், இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக உலக வங்கி 700 மில்லியன் டொலரை வழங்கவுள்ளது என்ற செய்தியும் வெளியாகியிருக்கின்றது. உண்மையாகவே அழுத்தங்களைக் கொடுக்க நினைத்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நிறைவேற்றினாலே நிதி உதவிகள் கிடைக்கும் என்ற கிடுக்குப் பிடியை அவை இலங்கைக்கு வைத்திருக்கலாம். ஏனெனில் ஐ.நா. சபை, உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்ற அமைப்புகளெல்லாம் அமெரிக்கா என்ற ஒற்றைச் சூத்திரதாரியால் இயக்கப்படும் வெவ்வேறான பொம்மைகளே. எனவே தனது பொம்மை அமைப்புகளூடாக , இலங்கையைப் பணிய வைத்து பரிந்துரைகளை நிறைவேற்ற அமெரிக்காவால் முடியும். ஆனால், அமெரிக்காவோ, அதன் கைப்பொம்மை அமைப்புகளோ அவ்வாறு செயற்படப் போவதில்லை. தீர்மானங்களை நிறைவேற்றுவதன் ஊடாக அவை தங்களின் நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்திக்கொள்ள முயல்கின்றனவே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று அவை உளச்சுத்தியுடன் செயற்படவில்லை. 'அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன'? என்பது தமிழ் மக்களிடையே உள்ள பழமொழி. கையாலாகாத ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், அங்கு கொண்டுவரப்படும் தீர்மானங்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவ்வாறே. இந்தத் தீர்மானங்களாலும், போலி அழுத்தங்களாலும் தமிழ் மக்களுக்கு எதுவும் நடந்துவிடப் போவதில்லை என்பதுதான் உண்மை.

## நாளொரு நல்வார்த்தை

"மனித சுபாவம் மிகவும் அற்புதமானது:
ஆயிரம் நன்மைகள் செய்துவிட்டு
ஒரு தீமை செய்தால் போதும்
ஆயிரமும் தீமைதான்"

— மாட்ரிக்



## ரணில் தேர்தலில் வென்றதும் தமிழ் மக்களுக்குத் தீர்வு!

### கூறுகின்றார் வஜிர



கொழும்பு, ஜூன் 21

**அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடந்தே தீரும். அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டு வெற்றி பெறுவார். அவரது ஆட்சிக்காலத்தில் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. தேர்தல் நிச்சயம் நடக்கும். இதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். அவர் எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் அல்லது பொது வேட்பாளராக நிறுத்தப்படுவாரா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவே நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் - என்றார். (எ-இ)

## ஈஸ்டர் தாக்குதல் பழியை சுமத்துவதற்கு முயற்சியாம்

### அனுதாபம் தேடுகிறார் நாமல்

கொழும்பு, ஜூன் 21

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பழியை ராஜபக்சக்கள் மீது சுமத்த ஒருதரப்பினர் முயற்சிக்கி றார்கள். குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தி உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்சக்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசியல் இலாபம் அடைவதை ஒரு தரப்பினர் பிரதான அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ராஜபக்சக்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை - என்றார். (எ-இ)

## ரணில் வருகைக்கு லண்டனில் எதிர்ப்பு

லண்டனில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றிருந்த நிலையில், அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவை மையப்படுத்திய மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். இந்த மாநாடு நடைபெறும் இடத்துக்கு அருகில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)

## நாளை

22.06.2023
வியாழக்கிழமை
ஆனி 07

சுபநேரம் : 07.24 - 08.54
ராகுகாலம் : 01.24 - 02.54

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலாலி விமான நிலையத்தின் பயணிகள் முனையம் விரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 21

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விஸ்தரிக்கப்படவுள்ள நிலையில், முதற்கட்டமாக பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் ஓடுபாதை 900 மீற்றர் விரிவுபடுத்தவேண்டிய தேவையுள்ளது. அதில் 500 மீற்றர் கடல் பக்கமாகவும் மற்றைய 400 மீற்றரை தரைப் பக்கமாகவும் முன்னெடுக்க முதலில் ஆலோசிக்கப்பட்டது. அதற்காக 168 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் தற்போதுள்ள சிறிய பயணிகள் முனையத்தில் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அதனைத் தவிர்க்கும் நோக்கில் முதலில் பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



# சீனாவின் ஆதிக்கத்தை இந்தியா தடுக்க வேண்டும்

## தொழிலாளர் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

எமது நாட்டின் வளங்களைக் காப்பாற்றுவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்வர வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான சீனாவின் முன்னோட்டமே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகள்- இவ்வாறு அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளுக்கும், சீன நிறுவனங்களுக்கும் தொடர்பில்லை என்று கூறிவிட முடியாது. சீன ஆதிக்கத்தின் வெள்ளோட்டமே வடக்கில் உள்ள கடலட்டைப் பண்ணைகள் என்பது இந்தியாவுக்கும் தெரியும். இந்தியப் பிரதமர் மோடி எமது நாட்டிலுள்ள வளங்களைப் பாதுகாப்பதற்கு அப்பால் எமது நாடு எம்முடைய கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும்- என்றார். (எ-20)



# இரணைமடு நன்னீர் மீன்பிடி; சிக்கல்களுக்கு தீர்வு காண்க!

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி இரணைமடு நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை சுமுகமாக நிறைவேற்றுவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து அதனை நடைமுறைப்படுத்துமாறு துறைசார் அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்துள்ளார்.

இரணைமடு நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கிடையே நிலவும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதேச மக்கள் மற்றும் நன்னீர் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன.

குளத்தில் விடப்படுகின்ற மீன் குஞ்சுகளின் தொகையை அதிகரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதேவேளை இரு நன்னீர் மீனவர் அமைப்புக்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் மற்றும் கோரிக்கைளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து அதனை நடைமுறைப்படுத்துமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தினார். துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தும் விதிமுறைகளை மீனவர் அமைப்புக்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். (ச-113)

# 'கிரிக்கெட் பெரும் சமர்' ஜூன் 30 - ஜூலை 1



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான 12 ஆவது 'இந்துக்களின் பெரும் சமர் -2023' எதிர்வரும் 30 ஆம் திகதி மற்றும் ஜூலை முதலாம் திகதிகளில் கொழும்பு தமிழ் யூனியன் சர்வதேச அரங்கில் இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு நடத்தப்படும் இரு பாடசாலை அணிகளுக்கிடையிலான சொல்லாடல் விவாதப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள பி.சரவணமுத்து சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இரு கல்லூரி அதிபர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், கொழும்பு இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் துறைப் பழைய மாணவர் சங்க உப தலைவர் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்துக்களின் 12 ஆவது 'கிரிக்கெட் பெரும் சமர் -2023' ஐ மேலும் வலுப்படுத்தும் வகையில் தொடரின் அனுசரணையாளராக ஜனசக்தி குழுமம் கைகோர்த்துள்ளது.

இதேவேளை, நடந்து முடிந்த கடந்த 11 தொடர்களிலும் கொழும்பு இந்துக் கல்லூரி மூன்று தடவைகளும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒரு தடவையும் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளதுடன் ஏனைய ஏழு தடவைகளும் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது. (ச-66)

# 40 டிப்போக்களுக்கு மூடுவிழா

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 107 டிப்போக்களில் 40 டிப்போக்கள் தற்போது தொடர்ந்து நட்டத்தில் உள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலான டிப்போக்கள் கிராமப்புறங்களில் இருப்பதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

நட்டத்தில் இயங்கும் டிப்போக்களை மூடுவதற்கு முன் நட்டமடையாமல் இருக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவை தோல்வியடைந்தால் மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அதிகாரி தெரிவித்தார். (ஒ-இ)

# சமூகப் பிறழ்வுகளைக் கட்டுப்படுத்த சனசமூக நிலையங்கள் அவசியம்

## விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் க.மகேசன் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூன் 21

எமது சமூகத்தில் அதிகரித்துள்ள பிறழ்வான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த சனசமூக நிலையங்களை வலுப்படுத்த வேண்டும். சனசமூக நிலையங்களும் இவ்வாறான விடயங்களைக் கட்டுப்படுத்த முன்னுரிமை கொடுத்து செயற்படவேண்டும்.

இவ்வாறு விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகப்பிறழ்வுகளை தனியொருவரால் கட்டுப்படுத்தமுடியாது. சமூகமாக ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இந்தச் சனசமூக நிலையம் ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்னோடியாக இருக்கவேண்டும். கூட்டு மனப்பான்மையை வளர்ப்பதில் சனசமூக நிலையங்களுக்கு பங்குண்டு. அதன் ஊடாகவே எதிர்கால சவால்களை நாம் எதிர்கொள்ளமுடியும்.

எப்படி இன்று விளையாட்டு நிகழ்வை கூட்டாக - ஒற்றுமையாக நடத்துகின்றீர்களோ அதேபோன்று சகல விடயங்களிலும் செயற்படுவதன் ஊடாக சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளலாம் - என்றார். (ஒ-ரி3-159)


# வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஜூலை நான்காம் திகதி செவ்வாய்க்கிழமை வரை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தனித்தனியாக தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதன் பொய்கை



"வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்
தானறி குற்றப் படின்." -வள்ளுவர்

க.சுவாமிநாதன்
(ஆசிரியர்)
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

# பிளாஸ்ரிக் என்னும் பேரரக்கன்!

தேசிய சுற்றாடல் வாரம், 'பிளாஸ்ரிக் மூலமாக ஏற்படக்கூடிய மாசைத் தடுப்போம்' என்ற தொனிப்பொருளில் அனைத்துப் பாடசாலைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த 12ஆம் திகதிமுதல் நேற்றுமுன்தினம் வரையில் கடைப்பிடிக்கப்பட்ட இந்த வாரத்தில், மரம்நடுகை, வளி மாசடைதலைக் குறைத்துக் கொள்ளுதல், சூழலை சுத்தப்படுத்துதல், உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு, நீர் மற்றும் நீர் மூலங்களின் பாதுகாப்பு, நிலைபேறுடைய காணி முகாமைத்துவம், பிளாஸ்ரிக் கழிவுகளின் முகாமைத்துவம் என்றவாறு ஒவ்வொரு தினங்களாகப் பிரித்து நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு அதற்கேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சூழலின் கூறுகள் பல்வேறு வழிகளில் மாசடைகின்றன. அந்தவகையில் தொழிற்சாலைக் கழிவுகள், கப்பல் பயணத்தின் போது வழிந்தோடும் எரிபொருள் வகைகள், எண்ணெய்க்கப்பல் விபத்துக்கள், மனிதனதும் விலங்குகளினதும் மலசலம், கழிக்கப்பட்ட உடற்பாகங்கள், இறந்த உடல்கள், விவசாய நடவடிக்கைகளின் போது சிபார்சு செய்யப்பட்ட அளவிலும் பார்க்க அதிகளவில் பயன்படுத்தப்படும் அசேதன வளமாக்கிகள், கிருமிகொல்லிகள், வீசப்படும் இலத்திரனியல் பொருள்கள் இவையெல்லாம் இன்று நீர்நிலைகளெங்கும் நிறைந்து அவை மாசடையக் காரணமாக அமைந்துள்ளன. இவை சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் ஏற்பட காரணமாக அமைகின்றன.

## வளி மாசடைவு

வளியானது தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை, நச்சு வாயுக்கள், மின்னுபகரணங்கள், இதர சாதனங்கள் என்பனவற்றை பயன்படுத்தும்போது வெளிவரும் வாயுக்கள், குப்பை கூழங்களினை எரிப்பதனால் உண்டாகும் புகை, போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகை, பிரிந்தழியும் சேதனக் கழிவுகளிலிருந்து வெளிவரும் வாயுக்கள், குண்டுவெடிப்பின் போது வெளிவரும் வாயுக்கள், கதிரியக்க, விண்வெளி ஆராய்ச்சி செயற்பாடுகள், கட்டுமானங்கள், கட்டட இடிப்பு, விவசாய நடவடிக்கைகளின் போது கிருமிநாசினி பிரயோகம், இரசாயன மற்றும் செயற்கை பொருள்களின் பயன்பாடு காரணமாகவும் மாசடைகின்றது.

## மண் மாசடைவு

மண்ணானது கைத்தொழில் செயற்பாடுகள், நவீன விவசாய நடவடிக்கைகள், முறையற்ற கழிவகற்றல் செயற்பாடு, கழிவு எண்ணெய்களை நிலத்தின்கீழ் விடுதல், எண்ணெய்க்கசிவுகள், முறையற்ற விதத்தில் மரங்களை வெட்டுதல், முறையற்ற மண்அகழ்வு, பெரும் கட்டடங்கள் அமைத்தல், இரத்தினக்கற்கள், சுரங்கச் செயற்பாடுகள் காரணமாக மாசடைகின்றது.

## ஒலி மாசடைவு

ஒலியானது தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் இரைச்சல், யுத்தத்தில் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள், வாகன இரைச்சல்கள், சமயநிகழ்வு, விழாக்களின் போது போடப்படும் பட்டாசுக்கள், வாணவேடிக்கைகள், இசை நிகழ்ச்சிகளின் போது ஒலிபெருக்கிகளிலிருந்து வெளிவரும்சத்தம், போக்குவரத்து சாதனங்களிலிருந்து வெளிவரும் இரைச்சல் காரணமாக மாசடைகின்றது.


## பிளாஸ்ரிக் தவிர்ப்போம்

இவை எல்லாவற்றையும் விட பிளாஸ்ரிக்தான் இன்று மனிதகுல எதிரியாகப் பரிணமித்து நிற்கின்றது. இன்று ஏகப்பட்ட அழிவுகளையும் ஆபத்துக்களையும் மனித சமூகத்துக்கு பிளாஸ்ரிக் ஏற்படுத்துகின்றது. பிளாஸ்ரிக் பொருள்களை சூழலில் வீசும்போது அவை வடிகால்களில் சென்றடைவதனால் மழைநீர் வடிந்தோட முடியாது வெள்ளப்பெருக்கு ஏற்பட சந்தர்ப்பமாக அமைகின்றது. பிளாஸ்ரிக் சூழலில் வீசப்படுவதனால் நீர் தேங்கி அங்கு நுளம்பு போன்றன பெருக்கமடைந்து பலதொற்றுநோய்கள் ஏற்பட வழிவகுக்கின்றது. பிளாஸ்ரிக் நிலத்தில் வீசப்படுவதனால் அவை மழைநீர் மண்ணின் இயற்கையான நீர் வடிப்பிற்கு தடையாக அமைந்து நிலக்கீழ்நீர் சேமிப்பு பாதிப்பு அடைவதுடன், தாவர வளர்ச்சிக்கும் தடைகளை ஏற்படுத்துகின்றது.

## ஆரோக்கிய வாழ்வுக்கு

பிளாஸ்ரிக் என்றும் பேரழிவுச் சாதனத்திலிருந்து மனித குலம் விலகியிருப்பதற்குப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை நாம் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகும். அத்தகைய நடவடிக்கைகளாவன-


1. மாணவர்களுக்கு சூழல் பாதுகாப்புக் கல்வியை வழங்குதல்.
2. நாட்டின் பேண்தகு அபிவிருத்தியை நோக்கிச் செயற்பாடுகளைக் மேம்படுத்தலும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் உற்பத்தியை குறைத்தலும்.
3. மக்களுக்கு சூழல் மாசடைதலால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
4. சூழலை மாசடையச் செய்பவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்தல், தண்டனை பெற்றுக்கொடுத்தல்.
5. கழிவு முகாமைத்துவத்தை முறையாக் மேற்கொள்ளல்.
6. தொழிற்சாலைகளுக்கு சூழல் பாதுகாப்பு விடயம் முறையாகப் பூர்த்தி செய்தால் மட்டும் அனுமதி வழங்கல்.
7. மண்அகழ்வு, சுரங்க தொழில் போன்றவற்றுக்கு புவிச்சரிதவியல் திணைக்களம் போன்ற அமைப்புக்கள் முறையான அனுமதியுடன் செயற்படல்.
8. வாகனங்களுக்கு புகைப்பரிசோதனை மேற்கொள்வதும் அதிக புகை வெளியிடும் வாகனங்களின் அனுமதியை இடைநிறுத்துதலும்.
9. மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் பயன்பாட்டை அதிகரிக்க மக்களுக்கு ஊக்கப்படுத்தல்.
10. சூழலுக்கு உவப்பான பொருள்களைப் பயன்படுத்தல்.
11. சிறுவயதிலிருந்தே மரநடுகையை ஊக்கப்படுத்தல்.
12. பொது இடங்களில் ஒலிபெருக்கிச் சாதனங்களை பயன்படுத்தல் தொடர்பான சட்டதிட்டங்களை அமுல்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 09 - 03 - 1949



விண்ணில் 18 - 06 - 2023

## வைத்திலிங்கம் சோமசுந்தரம்
### (சின்னத்துரை)

டச்சுறோட், சங்க வீதியைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சோமசுந்தரம் கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - மீனம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கயிலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நடராசா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான நாகராசா, சிவபாக்கியம், மயில்வாகனம், வேலாயுதப்பிள்ளை, துரைராசா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வாமதேவன் அவர்களின் மைத்துனரும், மங்களேஸ்வரி, சாந்தகுமாரி, கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், தயாபரன் சாரதாதேவி (அவுஸ்திரேலியா), மனோகரன் கீதா (ஜேர்மனி), யோகநாதன் வசந்தி (ஜேர்மனி), முரளி ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், நகுலேஸ்வரி (பிரான்ஸ்), அப்பன் (நோர்வே), ராங்கன் (நோர்வே), பிரசன்னா (பல்பொருள் வாணிபம் - சாவகச்சேரி), பிரணியனின் (சவுதி) சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

077 452 8837

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 08 - 1938



மறைவு 18 - 06 - 2023

## சரவணமுத்து ஸ்ரீஸ்கந்தராசா (JP)
### (சமாதான நீதவான்)
### (உரிமையாளர் திருமால் அச்சகம் - யாழ்ப்பாணம்)

முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், K.K.S. வீதி, வண்ணை சிவன் கோயிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஸ்ரீஸ்கந்தராசா கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பாக்கியம் தம்பதிகளின் ஏக புதல்வனும், நாகலிங்கம் - வர்ணமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செகராஜசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற தரணிதரன் (சட்டத்தரணி) மற்றும் சிவசக்தி (அவுஸ்திரேலியா), செந்தில்வேல் (சுவிஸ்), பராசக்தி (கொழும்பு), சங்கரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி, ஜயதேவன், லிங்காஜினி, ஜெயதேவன், ஜனனி ஆகியோரின் மாமனாரும், மிதுஷா, ஷாரா, சுகேஷன், லக்ஷா, நிஷான், அனோஜ், ஹர்ஷா, விகாஷ், ஆதேஷ், நிஷாந், காசினி ஆகியோரின் அன்புப் பாட்டனும், நர்த்தனா, யாதனா, லக்ஷான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (22.06.2023) வியாழக்கிழமை White House மலர்ச்சாலையில் நடைபெற்று முற்பகல் 10 மணியளில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். நத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.393, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/50935)AH-1

தகவல்:
குடும்பத்தினர்

077 915 8421

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 09 - 1930



இறப்பு 19 - 06 - 2023

## அப்புக்குட்டி சரஸ்வதி

கோண்டாவில் மேற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சரஸ்வதி அவர்கள் நேற்றுமுன்தினம் (19.06.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டியின் அன்பு மனைவியும், மகாதேவன், சின்னராசா, சிவராசா, சக்திமலர், பரமேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் தாயாரும், பவளராணி, மகாதேவி, சுபா, கௌசலா, கந்தசாமி, அமரர் தேவச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சுப்பையா சீவரத்தினம்

தோற்றம் : 02.08.1942 மறைவு : 18.06.2023



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சீவரத்தினம் கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், கிருபாளினி (கனடா), கிருபாகரன் (கனடா), பிரபாகரன் (கொக்குவில்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் (கனடா), விஜயலலிதா (கனடா), கசசிலாதேவி (கொக்குவில்), சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னபாக்கியம், குணரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சயன், கிந்துஷன் (கனடா), யதுஷா , கபிஷன் (கனடா), சரணியா, ருசிந்தன், பிருந்தாபன் (கொக்குவில்), மாதுளன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் லேன்,
கொக்குவில் கிழக்கு.

077 699 8889

தகவல்:
சீ.பிரபாகரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நெருக்கடிக்கு ரணிலே முதற்காரணம்

## சாடுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணமான தரப்பினரால் நாட்டை ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த நல்லாட்சி காலத்தில்தான் மத்தியவங்கி பிணைமுறி மோசடி மேற்கொள்ளப்பட்டது. இவர்தான் நாட்டின் பிரச்சினையை ஏற்படுத்திய பிரதான நபர். நாட்டில் இவரால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரப் பிரச்சினை கோத்தாபய ராஜபக்ச காலத்தில் தீவிரமடைந்தது.

அதை நாம் சுட்டிக்காட்டியபோதுதான், அரசாங்கத்திலிருந்து நாம் அன்று ஒதுக்கப்பட்டோம். நாட்டின் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி தங்கள் நாட்டு ரூபாவை இலங்கையில் பயன்பாட்டுக்கு விடுவதற்காக இந்தியா தற்போது முயற்சித்து வருகிறது. இப்போதும் யாழ்ப்பாணத்தில் சில கடைகளில் இந்தியா ரூபாதான் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் ரூபாவை இங்கே பயன்படுத்தினால், நாட்டின் சுங்கத்தையும் எமது நாட்டின் சுங்கத்தையும் ஒன்றாக இணைந்து விடுவார்கள். அப்படியானால், இந்தியப் பொருள்கள் எதற்கும் சுங்கவரி அறவிடப்பட மாட்டாது. இது இந்தியாவின் பொருளாதாரத்துக்குப் பெரும் நன்மையாக அமைந்துவிடும்.

இதற்குதான் ரணில் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. நாட்டில் பிரச்சினையொன்றை ஏற்படுத்திய இந்தத் தரப்பினரால் ஒருபோதும் அந்தப் பிரச்சினைகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாது - என்றார் (எ-இ)

அதிர்ஷ்டலாபச் சீட்டு

# விலை இரட்டிப்பு!

## விற்பனை முகவர்கள் எதிர்ப்பு

லொத்தர் சீட்டு ஒன்றின் விற்பனை விலை 40 ரூபாவாக எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதிமுதல் அதிகரிக்கப்படும் என தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை தெரிவித்துள்ளது.

லொத்தர் சீட்டுகளின் படங்கள், பரிசுகள் மற்றும் ஊக்குவிப்பு என்பன கவர்ச்சிகரமாக சந்தையில் வெளியிடப்படும் எனவும் லொத்தர் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை லொத்தர் சீட்டின் விலை அதிகரிக்குமாயின் விற்பனை குறைவடையும் என இந்தத் தீர்மானத்துக்கு லொத்தர் சீட்டு விற்பனை முகவர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. அதிர்ஷ்டலாபச் சீட்டின் விலை அதிகரிக்குமாயின் லொத்தர் விற்பனையிலிருந்து விலகுவதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் பி. எஸ். எஸ். மாரசிங்க கூறியுள்ளார். (ச-ரி3-6)








# கோழியிறைச்சி 900/=
# முட்டை 35/=



## முட்டை வாத்தக சங்கம் இணக்கம்

கொழும்பு, ஜூன் 21

**ஒரு கிலோ கோழி இறைச்சியை 900 ரூபாவுக்கும், முட்டை ஒன்றை 35 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அதன் தலைவர் என்டன் நிஷாந்த அப்புஹாமி இதனைத் தெரிவித்தார்..

உற்பத்தியாளர்கள் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றை அதிக இலாபத்துடன் சந்தைக்கு வழங்குகின்றனர். தற்போது திகரித்து வரும் கோழி இறைச்சி விலையைு கட்டுப்படுத்துவது தொடர்பில் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாடளாவிய ரீதியில் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# யோகா நிகழ்வு யாழில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் 9 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் சர்வதேச யோகா தினமான இன்று புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)



முட்டை உற்பத்தியை அதிகரிக்க

# 1,00,000 குஞ்சு விநியோகம்!

முட்டை உற்பத்தியை நீடித்து நிலையாக அதிகரிக்க நாடளாவிய ரீதியில் கோழிக்குஞ்சு விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு இந்தத் திட்டத்தின் பலன்கள் அடுத்த 4 மாதங்களில் கிடைக்கப்பெறும் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் முதற்கட்டமாக கோழிக்குஞ்சு விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு லட்சம் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுந்து

# சிதைந்துபோகும் நூலகங்கள்!

பல அரச ஊழியர்களின் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பன நியாயமான அடிப்படையில் கிட்டாமல் போகின்றமைக்கு உயர் அதிகாரிகளின் அசமந்தப்போக்கும், பக்கச் சார்புத் தன்மையும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இன்று நாடு பொருளாதார நிலையில் அதலபாதாளத்துக்குச் செல்வதற்கு வெறுமனே அரசை மட்டும் குறைகூறுவது ஏற்புடையது அல்ல. அத்தகைய மதிப்பீடு எதிர்காலத்தை மேலும் பாதகமாக உருவாக்கி விடும். மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர். பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், சுமார் 70 அரச அதிகாரிகளை பணிநீக்கம் செய்ய பணிப்புரை விடுத்துள்ளார்.

ஓர் அரச ஊழியருக்கு பதவியுயர்வு, இடமாற்றம், சம்பள உயர்வு போன்றன இயல்பான உரிமைகள் ஆகும். இதனை உரிய அதிகாரிகள் செம்மையாகச் செயற்படுத்துவார்களாயின் எந்த அரச ஊழியருக்கும் அநீதி இடம்பெறாது. ஆனால் வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் நீண்டகாலமாக 'நூலகர்' வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதனால் பல நூலக உதவியாளர்கள் நூலகவியல் பட்டங்களைப் பெற்றும், தமது பதவியுர்வு, சம்பள உயர்வை அடைந்துகொள்ள முடியவில்லை. இதனால், பல நூலக உதவியாளர்கள் மன விரக்தியில் விருப்ப ஓய்வைப் பெற்றுள்ளனர். தொடர்ச்சியாகப் போராடுபவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். வடக்கு மாகாணம் இறுதியாக 2017ஆம் ஆண்டு ஆட்சேர்ப்புச் செய்தது. ஆனால் இன்று சுமார் 36ற்கு மேற்பட்ட நூலகர்கள் வெற்றிடம் நிலவுகிறது.


'தேசிய நூலக ஆவணமாக்கல் சபை' வடக்கு மாகாணங்களிலுள்ள நூலகங்களை தரப்படுத்தி தரம் உயர்த்துகின்றது. இது இலங்கையிலுள்ள நூலகங்களுக்கான 'தாய்' நிறுவனம் ஆகும். ஆனால் வடமாகாணத்தில் வன்னிப் பெரும்பரப்பிலுள்ள இரண்டு மாவட்டங்களுக்கு அறவே நூலகர்கள் இல்லை. ஆனால் நூலகங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அங்கு கடமைபுரியும் நூலக உதவியாளர்கள் சேவைமூப்பு, உரிய நூலகக் கல்வியைக் கற்றும் தரம் உயர்த்தப்படவில்லை. அங்குள்ள நூலகங்களின் மனித வளங்கள் தரம் உயர்த்தப்படாது வெறுமனே 'நூலகம்' என்ற ஸ்தாபனமே தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஸ்தாபனம் அல்லது நிறுவனத்தை தரமுயர்த்தும் கடமைப்பாடு இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையைச் சார்ந்தது. ஆனால் உரிய நூலகக் கல்வியைக் கற்ற, சேவை மூப்புடைய நூலக உதவியாளர்களை நூலகர்களாக பதவியுயர்த்த இன்றுவரை வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதிப்பகுதி முதல் புதிய ஆள்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை என சுற்றுநிருபம் பிரசுரிக்கப்பட்டது. அவ்வாறாயின் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுமார் 40க்கும் மேற்பட்ட நூலகர் வெற்றிடங்கள் இருந்தன. இந்த வெற்றிடங்களுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அசமந்தப்போக்கே காரணம் என்பதே இதன்மூலம் புலப்படுகின்றது.



தற்போதைய சூழலில் ஆளணிகளை அதிகாரிகளின் அனுமதி பெற்று தேவையின் நிமிர்த்தம் நிரப்புவதற்கு அரசு அனுமதித்துள்ளது. மேலும் திணைக்களத்துக்குள் பதவியுயர்வுக்கு அரசு அனுமதித்துள்ளது. இதனை உரிய அதிகாரிகள் செம்மையாகச் செய்வார்களாயின் வடக்கு மாகாணத்தில் 'தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால்' தரமுயர்த்தப்பட்ட நூலகங்கள், பதவி உயர்த்தப்படும் நூலகர்கள் அல்லது புதிதாக உள்வாங்கப்படும் நூலகர்களால் உரிய முறையில் செவ்வனே இயங்கும்.

வெறுமனே நூலக உதவியாளர்களுக்கு ஏற்பட்ட அநீதி மட்டும் அல்ல நூலகர் பணியிடமாற்றத்தின் போதும் கடமையில் இருக்கும் நூலகர்களுக்கும் பதிலீடு இல்லாத காரணத்தால் பின்தங்கி அல்லது கஷ்டப்பிரதேசங்களில் வெளிமாவட்டங்களில் கடமை புரிவோரும் தமது பணி இடமாற்றத்தைப் பெறமுடியாத நிலையில் பரிதவிக்கிறார்கள். குறித்த நூலக சேவையில் பணியாளர் சங்கம் செயற்படாத காரணத்தால், நூலக சேவைப் பகுதி பிரச்சினைகள் வெளியுலகு அறிவதில்லை. இதையும் கடந்து ஒரு சிலர் பிரச்சினைகளை முன்னெடுத்தால் பல்வேறு சிக்கல்களுக்கு தனிப்பட்ட முறையில் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. கீழைத்தேச நாடுகளில் என்றோ நூலகங்கள் தோன்றி விட்டன ஆனால், அவற்றின் வளர்ச்சி மந்தமாகவே உள்ளது. மேலைத்தேய நாடுகளில் நூலகங்கள் பெரும் வளர்ச்சி கண்டன. இதனால், அந்த நாடுகளும் வளர்ந்துள்ளன. நூலகம் ஒரு மனிதனை சாகும் வரை அல்ல, மற்றவர்கள் மனதில் வாழும் வரை வளர்க்கும். தெரியாததைத் தெரிய வைக்கும். புரியாததை புரிய வைக்கும். உருண்டு கொண்டிருக்கும் உலகம், நூலகம் இல்லையேல் இருண்டு விடும். இது இங்குள்ள அதிகாரிகளுக்குப் புரியட்டும். எம் நூலகங்கள் இனியாவது விடியட்டும்.

# வெப்பத்தணிப்பே பூமியின் இருப்பு!



வடகோவை சிவநேசன்

பச்சைப்பசேல் என்று பரந்து கிடக்கும் வயல் வெளிகள், பசுமை நிறைந்த தென்னஞ் சோலைகள், வானளாவ உயர்ந்து நிற்கும் பனை மரங்கள், அடர்ந்த பனம் தோப்புக்கள் மனிதன் போகின்ற வீதியெங்கும் நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் இலுப்பை மரங்கள், நாவல் மரங்கள், புளிய மரங்கள், விளாத்தி மரங்கள், தெரு எங்கும் குளிர்மை நிலையை பேணி நின்ற ஆடாதோடை தாவரங்கள், அன்னமுன்னாத் தாவரங்கள், நாயுண்ணித் தாவரங்கள் போன்றவற்றை இன்றைய யாழ். மண்ணில் நாம் காண்பது மிகமிக அரிது. வெறும் கட்டடக் கானகங்கள்தான் இன்று யாழ்ப்பாணத்தில் எஞ்சி நிற்கின்றன. இதன் விளைவாக இன்று குடாநாட்டை கொடும் வெப்பம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது.

சூரியனை மையமாகக் கொண்டு இயங்கும் பிரபஞ்சத்தில் உள்ள கோள்களில் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன. காரணம் சிறப்பான பூமியின் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் பூமியின் வளிமண்டல அமைப்பில் நீர் திரவ நிலையில் காணப்படுதல் ஆகும். ஆனால், பூமியின் இயல்பான வெப்பநிலையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வெப்பநிலை தற்போது சுமார் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அல்லது அந்த அதிகரிப்பை நோக்கிப் பயணப்படுகின்றது. தற்போது பூமியில் காட்டு மரங்கள் தறிக்கப்படுவதால் பலமுனைச் சவாலை பூமி எதிர்கொண்டுள்ளது. வாகனப்புகைகள், தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் வாயுக்கள் போன்றவற்றால் பூமியின் இயற்கையான வளிமண்டல அமைப்பில் பல்வேறுபட்ட விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கெதிராக சர்வதே அளவில் இன்று போராட்டங்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பூமியின் வெப்பநிலையை இரண்டு செல்சியஸால் குறைப்பதற்குக்கூட தற்போது உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. எனினும் இந்த முயற்சிகளுக்கான முழுமையான பயன் கிடைத்ததா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாகவும் அமைகின்றது. பூமியின் வெப்பம் தணிக்கப்படும்போதுதான் மனித சமூகத்தின் இருப்பு உறுதிப்படுத்தப்படும். தீவு நாடுகளின் இருப்பு உறுதிப்படுத்தப்படும். பசுமை நிலைகளின் பாதுகாப்புத்தான் பூமியின் பாதுகாப்பு. அதைநோக்கிய பயணப்பாடு எங்கள் அனைவருக்கும் மிக அவசியம். ஏனெனில் இது வொரு பொதுப்பிரச்சினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று சர்வதேச யோகா தினமாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# யோகமும் வாழ்வும்



ஸ்ரீ.நதிபரன்
யோகா போதனாசிரியர்

ஒரு கலை வடிவம் இற்றைக்கு பல்லாயிரம் வருடங்கள் கடந்தும் வாழ்ந்து வருகின்றதெனில் அதனுள் அமிழ்ந்திருக்கக்கூடிய அழியாப் பெருமைகள், தத்துவப்பொருண்மைகள் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்க வேண்டும். இல்லாவிடில் காலவோட்டத்தில் அதன் இருப்பானது அடித்துச் செல்லப்பட்டிருக்கும். 64 கலைகளுள் ஒன்றாக திகழும் யோகக்கலையின் நுண்மைகள் குறித்து சிலாகிக்கையில் பல்வேறுபட்ட அரிய சிறப்புகள் பொதிந்துள்ளமையை அறிந்துகொள்ள முடியும். மனித வாழ்வினை வரன்முறைக்குட்படுத்தி செழுமையுற, பயனுற வாழும் வழிமுறைகள் பற்றி வகுத்துரைக்கும் இக்கலை பற்றிய பிரக்ஞைபூர்வமான புரிதல்கள் காலவோட்டத்தில் அதிகரித்து வருகின்றமை கண்கூடு. உலக நாடுகளைப் பொறுத்த வரையில் யோகத்திலுள்ள நோய் குணமாக்கும் தன்மையை ஆய்ந்துணர்ந்து கொண்டமையால்தான் அதன் மகத்துவம் பரந்து கிளைவிட்டு வருகின்றது. மக்களின் இயற்கைக்கு முரணான தற்போதைய வாழ்வியல் மாற்றத்தின் ஆகர்சிப்பினால் நோய்கள் மற்றும் பிணிநிலைகளின் பீடிப்புக்களால் அல்லலுற்று வரும் நிலையில் பக்கவிளைவுகள் இல்லாத, செலவில்லா மருத்துவமுறையாக நோக்கப்படும் யோகத்தினை கைக்கொள்ளத் தலைப்படுகின்றனர். காலாதிகாலம் நவீன மருத்துவ விஞ்ஞானமுறைகள் எவ்வளவுதான் முன்னேற்றமடைந்து வந்தாலும் மேற்கிளம்புகின்ற நோய்த் தாக்கங்களிற்கு அவை ஈடுகொடுக்க அல்லது கட்டுப்படுத்த முடியாமல் தோல்வி கண்டு வருகின்றமையும் கண்கூடு. இந்நிலையில் இயற்கையோடிணைந்த வாழ்வியல் வழிமுறையாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்கான சாதனமாகவும் சித்தர்கள், மகான்களால் ஆராதித்து போசித்து வளர்க்கப்பட்ட யோகக்கலையானது வாழ்வியலின் செழுமைநிலையினை எய்துவதற்காக உலக மக்களால் தற்காலத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது.

### ஆரோக்கியத்துக்கு அருமருந்தானது

இங்கு ஆரோக்கியம் என்ற எண்ணக்கருவானது உடல், உள, சமூகம், ஆன்மிகம், சூழல் போன்ற விடயங்களில் நன்னிலை அடைவதனை நோக்காக கொண்டிருந்தாலும் பொதுவாக உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதனை மையப்படுத்தியே அதிகம் பேசப்படுகின்றன. இயற்கைக்கு முரணான நமது வாழ்வியல் முறையால் நோய்களின் பெருக்கங்களும் அதற்கான மருந்துவகைகளின் உற்பத்தி நுகர்வின் வேகமும் அதிகரித்து வருகின்றன. பொதுப்புத்தியில் நோக்கின் தற்போதைய மருந்துகளில் இருவிடயங்களை நம்மால் அவதானிக்க முடியும். மக்கள் இறக்காமலும் இருக்க வேண்டும் அத்துடன் சுகதேகிகளாக இருக்கவும் கூடாது.

ஒருவருக்கு உடலில் எங்கோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது என வைத்துக்கொள்வோம். நோய்க்கு தீர்வுநாடி மருத்துவ மனைக்குச் சென்றால் எல்லா மருத்துவ பரிசோதனைகளையும் முடிந்தவுடன் நோய்க்கான அறிகுறிகள் ஏதும் தென்படின் அதற்குரிய மருந்துவகைகளை மருத்துவர் பரிந்துரைப்பார். குறித்தவொரு பிணிக்கு மருந்து வகைகளை உட்கொள்ள ஆரம்பித்தால் இறக்கும் வரையிலும் தொடர்ச்சியாக பாவித்துக்கொண்டிருக்கும் துரதிர்ஷ்டமான நிலைமைகளை பார்க்கிறோம். இதனை அடிப்படையாக வைத்தே மருந்துகளை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருவர் ஆரோக்கியமாக இல்லாதுவிடின் அதாவது நோய்வாய்ப்படுகையில் மருந்துப்பொருள்களின் நுகர்வு வீதம் ஏறுமுகமாகும் அதேவேளை அவர் இறக்காமல் நோய்களுடன் வாழ்க்கையை நீண்டகாலம் கழிப்பாராகில் அவற்றின் தொடர் பாவனைகளால் ஔடத உற்பத்தி நிறுவனங்கள் அதிக வருமானங்கள் ஈட்டுவதையும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். எனவே பக்கவிளைவுகளற்றதும் செலவற்றதும் பாதுகாப்பானதுமாகிய முன்னோர்கள் எமக்களித்துச் சென்ற அரும்பெரும் பொக்கிசமான யோக நெறிமுறைகளை நம் வாழ்க்கையில் சரிவர கடைப்பிடித்தால் நீண்ட ஆயுளுடன் சந்தோசமாக வாழமுடியும் என்பதை சித்தர்களின் யோகம் மூலம் அனுபவ ரீதியாக நிறுவியிருக்கின்றனர்.

### மருத்துவ மாபியாவுக்கு சிம்மசொப்பனமானது

தற்கால மக்களது வாழ்வியல் கணிசமான மாற்றங்களை சந்தித்து வருகின்றது. இயற்கைக்கு முரணிலையாக வாழ்வியல் செல்நெறி கட்டமைகின்றமையால் வழமைக்குச் மாறாக பல்வேறு நோய், பிணித் தாக்கங்களின் கோரப்பிடிக்குள் சிக்குவதற்கும் வழிசமைக்கின்றது. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற நிலை மாறி தற்போது மருத்துவமனையில்லா இடத்தில் குடியிருக்க வேண்டாம் என்றெண்ணும் வகையில் முன்னரைக்காட்டிலும் வீதிக்கு வீதி தனியார் மருத்துவமனைகளின் பெருக்கமும் ஆக்கிரமித்து வருகின்றமை நோயாளிகளின் எண்ணிக்கையிலேற்படும் அதிகரிப்பையே சுட்டுகின்றது. நீங்கள் ஒருதடவை மருத்துவ பரிசோதனைக்கென தனியார் மருத்துவமனையொன்றுக்குச் சென்றுவரும் போது மருத்துவசேவை எங்ஙனம் வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வருகின்றது என்பது புலனாகும். ஒரு நாட்டில் மருத்துவ மனைகள், சிறைச்சாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதெனில் அந்த நாட்டின் அபிவிருத்தியானது பின்னோக்கியே செல்லும் என்பது வெளிப்படை. எனவேதான் மேலைத்தேய கலாசாரங்களில் ஈர்ப்புக்கொள்ளாது செலவில்லாத இயற்கையோடிணைந்த யோக நெறிமுறையினை பின்பற்றும் விருப்பு எல்லோர் மனங்களிலும் துளிர்விட வேண்டும். அத்துடன் இன்றைய சமூகம் தடம் மாறிச்செல்வததால் எதிர்கால இளம் சந்ததி இருண்ட உலகத்தினை நோக்கியே பயணப்படுகின்றது. தற்காலத்தில் இதனை தடுத்து நிறுத்தவல்ல பிரம்மாஸ்திரமாக யோகக் கலை திகழ்கின்றதெனில் மாற்றுக்கருத்தில்லை.

சமகாலத்தில் யோகக்கலை மீதான மக்களின் நாட்டங்கள் ஈடுபாடுகள் தன்னெழுச்சியாக அதிகரித்துவரும் நிலையில் அதிகளவு வேற்றின மக்கள்கூட இன, மத, பேதம் கடந்து இதனை பயில்வதற்கு அதிக ஆர்வம்காட்டி வருவதனையும் இதன்மூலம் உலக நாடுகள் பலவற்றில் கல்விக்கூடங்களிலும் யோகம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எமது பிரதேசத்தினை பொறுத்தவரை புற்றீசல்கள் போல யோகப்பயிற்சி மையங்கள் உருவாகி வருகின்றமையும் பல பாடசாலைகளில் யோகாசனப் பயிற்சிகள் குறிப்பாக அதன் முக்கியமான பிரிவாக அமைகின்ற சூரிய நமஸ்காரம் எனும் பயிற்சிமுறையானது மாணவர்களால் பின்பற்றப்பட்டு வருவதனையும் நாட்டிலுள்ள ஒரு சில பல்கலைக்கழகங்களில் கூட யோகக்கலை பயிற்றப்பட்டு வருகின்றமையும் நோக்கத்தக்கது. அத்துடன் தற்காலத்தில் சர்வதேச ரீதியாக பல்வேறு கல்விச்சாலைகளில் போதிக்கப்பட்டு வருகின்றமையும் உலகில் ஏராளமானோர் இந்தக்கலையின் கண் இருக்கக்கூடிய பல்வேறு நன்மைகள் குறிப்பாக நோய் குணமாக்கல் திறன் அதிகமிருப்பதனால் இதன்பால் ஈர்க்கப்பட்டு கூடுதலானோர் இன, மத பேதம் கடந்து பயின்று பயன்பெற்று வருகின்றமையின் காரணமாகவோ என்னவோ அதன் மீது மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை மென்மேலும் அதிகரிப்பதற்காக சர்வ தேச அரசியலின் உயர் பீடமாக விளங்குகின்ற ஐ.நா. சபைகூட சர்வதேச ரீதியாக கொண்டாடி கௌரவம் செய்யவேண்டிய தினங்களுள் யோகக்கலையினையும் உள்ளடக்கியிருப்பதானது அதன் தாற்பரியத்தை மேன்மையினை முரசறைந்து நிற்கின்றது. அதுமட்டுமல்லாமல் எமது நல்வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களையும் இது தன்னகத்தே கொண்டுள்ளமையால் இளையோர்களிடத்தில் இந்தக் கலையினை கொண்டுசெல்கையில் திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளந்தலைமுறையினரின் வாழ்வியலில் கலங்கரைவிளக்கமாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. ■

# நகைச்சுவையால் எம் வாழ்வு வளம் பெறும்

நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை



இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் பெருமக்களுள் 'செய்குதம்பிப் புலவர்' மகத்தானவர். இவர் சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர். தமிழ் இலக்கியத்திலும் அரசியலிலும் சிறப்புற சொற்பொழிவாற்றும் வல்லமை பெற்றவர். புலவர்கள் யாவராலும் போற்றப்படும் பெருமை மிகுந்த இவர், வியக்கத்தக்க நினைவாற்றல் கொண்டவர். ஒரேநேரத்தில் நூறு விதமான செயல்களைச் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றமையினால் இவரை யாவரும் 'சதாவதானி' என அழைத்தனர்.

புலவர் செய்குதம்பி சொற்பொழிவு ஆற்றும் போதும், நண்பர்களுடன் உரையாடும்போதும் நகைச்சுவை ததும்பிப் பேசுவது வழக்கம். இவரது நகைச்சுவை உரையாடலுக்கு சான்றாக நடந்த சம்பவமொன்றைப் பார்ப்போம். ஒரு நாள் புலவருக்கு நெருங்கிய நண்பர் ஒருவரின் மகனார் இவரைச் சந்திக்க இவரின் வீட்டுக்கு வந்துள்ளான். அந்த இளைஞன் தமிழார்வம் உள்ளவன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கற்றவர்களிடம் தமிழ் படிக்கும் ஆர்வமுடையவன். புலவருடன் உரையாடிய இளைஞன் அவருடன் உரையாடலைத் தொடுத்து நல்ல விடயங்களைக் கற்றுக்கொள்ள விரும்பினான். சம்பாஷணை தொடர்கின்றது........

புலவர் அவர்களே! என் தந்தைக்கு ஏதோ பணத் தேவையாம் தங்களிடம் நூறு ரூபா வாங்கித் தருமாறு கூறினார் என்று சொன்னான் இளைஞன். சரி தருகின்றேன் என்று கூறிவிட்டு புலவர் உள்ளே சென்று நூறுரூபாயுடன் திரும்பி வந்தார். புலவரோடு வேடிக்கையாகப் பேச எண்ணிய இளைஞன் 'தந்தை கேட்டது நூறு ரூபாதான். என்றாலும் இருநூறு ரூபா தந்தால் நல்லாயிருக்கும்' என்றான். இளைஞனின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட புலவர், ஓ!அதற்கென்ன தம்பி. இரு நூறு ரூபா தருகிறேன் என்றார். (அதாவது தம்பி சற்று இரு, உனக்கு நூறு ரூபா தருகின்றேன் என்றார்). இளைஞன் சிரித்துக்கொண்டு, 'சரி இருநூறுதான் கொடுக்கின்றீர்கள். அதனை முந்நூறு ரூபாயாகக் கொடுத்து விடுங்களேன்' என்றான். 'சரி முந்நூறு (முன்என்முன் நூறு) ரூபா பெற்றுக் கொள் தம்பி' என்றார் புலவர்.

இளைஞன் விடவில்லை, 'நானூறு ரூபா தேவைப்படுகின்றது' என்றான். புலவர் 'நான் நூறு ரூபாய் தருகிறேன்' என்று பதில் அளித்தார். 'அப்படியானால் ஐந்நூறு தாருங்கள்' என்றான் இளைஞன். ஆச்சரியத்தை முகத்தில் படரவிட்ட புலவர் 'ஐ! நூறு தருகிறேன்' என்று கூறினார்.

இளைஞனோ அவரை விட்டபாடில்லை. விடாப்பிடியாகத் தொடர்ந்து 'அறுநூறு ரூபாவாகக் கொடுத்து விடுங்கள்' என்றான். புலவர் சற்றும் தாமதிக்காமல் 'அறு, (பேச்சை நிறுத்து என்பது பொருள்) நூறு வாங்கிக் கொள் என்று மொழிந்தார். இளைஞன் மேலும் தொடர்ந்தான். 'எழு நூறு கொடுங்களேன்' என்று கேட்டான். புலவர் புன்னகை புரிந்தவாறு 'எழு, நூறு தருகின்றேன் – என்றார். (எழுஎழுந்திரு)

பெரும் வியப்படைந்த இளைஞன் மேலும் புலவரின் வாயைக் கிளறஎண்ணி 'எண்ணூறு கொடுங்களேன்' என்றான். கடுப்பாகிய புலவர் தாம் வைத்திருந்த நூறு ரூபாவுக்கான சில்லறைக் காசுகளை இளைஞனிடம் நீட்டி, 'இந்தா எண் நூறு (எண்ணிக் கொள்) ரூபா இருக்கிறது எடுத்துக்கொள்' – என்றார். இதற்கு மேலும் உரையாடலைத் தொடர்வது மரியாதையாக இராது என்று கருதிய இளைஞன், புலவரின் பேச்சாற்றலை எண்ணி வியந்தவாறு புலவருக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தி விட்டு நூறு ரூபாவுடன் நடையைக் கட்டினான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# ஜதிகள் விளையாடி லயம் சொட்டிய அமலனின் மிருதங்க அரங்கேற்றம்

கலைகள் வாழக் காலம் தந்த பரிசுதான் அரங்கேற்றம் இது கலைஞன் ஒருவனை சமூகமயமாக்கி ஆளுமைசேர அங்கீகரித்து சித்திபெற வைக்கின்ற ஒரு ஆசீர்வாதமான ஆற்றுகையாகும். குடும்ப உறவுகளுக்கும் கலைப் பிரம்மாக்களுக்கும் கலை ஆர்வலர்களுக்கும் ,குரு சிஸ்ய சாம்ராச்சிய ஒப்புரவாளர்களுக்கும் அரங்கேற்றமானது சரஸ்வதி கடாட்சமாகிய வாலிதாம் இன்பமயமாகுமாறு வடிவமைக்கப்டும். இது ஒரு சமூகப் பங்களிப்பு மட்டுமல்ல சமூகத்தின் பங்களிப்பும் கூட என்று மிகைபடக் கூறுவதும் சால்புடையதாகும் நல்லைக் கந்தன் குருஸேத்திர முதல்வரும் மிகுந்த ஞான வாரிதியும் இசைக் கலைமாணியும் பல சீடர்களை உருவாக்கிய அரங்கேற்றிய மிருதங்க ஆசானுமாகிய சி.துரைராசா அவர்களது சிஸ்யனும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவனுமாகிய செல்வன் தர்மலிங்கம். அமலன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நீராவியடி இலங்கைவேந்தன் கல்லூரியில் கன கச்சிதமாக அரங்கேறியது.

கல்விப்புலம் சார்ந்தவர்கள் தர்மலிங்கம் சிவசக்தி ஆகிய

,பைந்தமிழருகே இசைக்குவரமாகும் படியான தேன் தமிழ் உருப்படிகள் வீரமணி ஐயாவையும் யோகர் சுவாமிகளையும் அருட்கவியையும் அரங்கிற்கு மறவாமல் கொண்டுவரும் பாங்கு யாவுமே அரங்கேற்ற முதலீடுகளாகும் ஆபோகி ,தன்னியாசி ,கதனகுதூகலம் ,பெஹாக்,பிருந்தாவனி ,கண் முகப் பிரியா ,தேஸ்,மோகனம்,மத்தியமாவதி இராக உருப்படிகளுள் ,பிருந்தாவனி இராக ,மிஸ்ர சாபு தாளத்திலமைந்த தவமைந்தனின் உருப்படிக்கு இருந்த பிரம்மாதமே அடடா அற்புதமாகத் தேன் சொட்டியது மிஸ்ரசாபு தாளமும் கண்டசாபு தாளமும் ஒரு அரங்கேற்றத்துக்கு தரமாகவும் வரமாகவும் அமைந்து உருப்படிக்கும் சபைக்கும் உயிர் கொடுப்பதுண்டு அதனை அமலனின் கைகள் சரியாகவும் கச்சிதமாகவும் பேறாக்கியுள்ளமை குருநாதராம் துரைராஜாவுக்கு கிடைத்த நூறு புள்ளிகளாகும். அமலனின் பெற்றோர் வடமாகாண கல்விப்புலம் சார்ந்த

இருவரும் என்ற காரணத்தால் அரங்க மண்டபம் நிரம்பி வழிந்தது. உபசரிப்பும் இனிதே தேன் சொட்டியது.

வழமையான அரங்க சம்பிரதாயங்களோhடு அரங்கேற்றம் ஹம்சத்வனி இராகமிடுக்கான எடுப்புடன் தான வர்ணம் திரிகால பிரமித்தவார்ப்புடன் தவமைந்தனாம் தவதாசன் றொபேட் அவர்களது கனதியான மனோலய வசீகரக் குரலில் தானவர்ண ஞான உருப்படியானது அரங்கினைக் களைகட்டச் செய்தது வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் அவர்களது அனுசரணையும் கெஞ்சிரா கலைஞர் பத்மநாதன் சியாம் கிருஸ்ணா அவர்களது ஊக்குவிப்பும் கடம் வித்தகர் கனகசபை சிவகுமார் அவர்களத தொட்டுவிடும் பக்கபலமும் முகர்சிங் கலைஞர் கந்தசாமி நந்தகுமார் அவர்களது பரோபகார நாதமும் தம்பூராக் கலைஞர் கந்தசாமி ரஜீவன் அவர்கள் மீட்டிய ரீங்கார சுருதி அதிர்வும் அமலன் அவர்களது கைகளை ஜதியோடு பேசவைத்தன.

பொதுவாகவே குரலிசை வல்லவரான இசைமாணி தவநாதன் றொபேட் அவர்களது குரலமைப்பு சுருதிலயக் கட்டமைப்பு இராகவிநோதம்,தமிழ்வார்ப்பு ,தக்கதான உச்சரிப்பு ,அரங்க தர்மம்,சபையறிந்து ஆற்றுகை ,பரிச்சயமான ஒத்திகை,மிருதங்க ஜதி கதி பேதங்களுக்கேற்ப தீர்மானங்கள்

புலமையானவர்கள் என்பதால் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபம் நிரம்பி வழிந்தது மட்டுமல்ல அவர்களுக்கான உபசரிப்பினால் பிரதான உருப்படியான இராகம் .......

தானம் ......பல்லவி என்ற உருப்படி தனது முழுமையான வசீகரிப்பினை நேரம், இடம் , காலம் கருதிய பாங்கினால் சுருக்கிக் கொண்டாலும் அமலுக்கான பங்களிப்புக்கு எந்த வித குறையொன்றுமில்லாது பல்லவிக்கான அனுலோக பிரவாகங்களையும் ஜாதிகளினாலும் கதி நடை வார்ப்புகளாலும் சோடிக்கப்பட்ட தனி ஆவர்த்தன வியாபகங்களையும் ஜதிக் கோர்வைகளுக்கோ பஞ்சமில்லாதவாறு அதிரடியான தீர்மானங்களையும் இடி முழக்கமோ அல்லது இசை முழக்கமோ அல்லது இசை இரசிகப் பெரு மக்களின் கரவோசை முழக்கமோ என்று அறியவொண்ணாதபடி முய் தாய்ப்புக்களையும் இசைமாரியென லயம் சொட்டியவாறு தர்மலிங்கம்,சிவசக்தி, தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வன் 'அமலன்' அவர்களது பிஞ்சு விரல்கள் சாகசம் புரிந்தன. சைவசமயத்தின் நந்தவனம் காரைநகர் கந்தபுராணத்தின் கலாசார வாசல் கந்தர்மடம் காரைநகரும் கந்தர்மடமும் கல்வி அழகும் ஒன்றாக வெல்லப்பட்ட அரங்கேற்றமாக அமலன் தனது சாதனையைப் பதிவு செய்துள்ளார். வலந்

தலையில் அமலனின் வாசிப்பு மிருதங்க வாத்தியத்துக்கு ஜீவனைக் கொடுத்து சபையினில் உள்ளவர்களையும் பாவனை கொள்ளுமாறு தூண்டவும் தித்திக்கவும் வைத்தது அமலனின் தாளக்கணக்கு வழக்கு காலப் பிரமாணம் கருதரிய கலை நுணுக்கங்கள் யாவுமே அற்புதம். ஒரு அரங்கேற்றத்துக்கு அவசியமான மனோலயத்தையும் தாள லயத்தையும் தன் சுயத்தையும் அதியுச்சப் பயன்பாட்டையும் அரவணைத்து விருந்தினர்களையும் இரசிகப் பெருமக்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பெருமை அரங்கேற்ற நாயகன் அமலனுக்கு தனித்துவமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் தாரமும் குருவும் தலைவிதிப் படி என்பதற்கிணங்க அமலனுக்கு குருவாயமைந்த மிருதங்க ஞானவாரிதி சின்னையா துரைராசா அவர்கள் அரங்கேற்றக் கலைஞர்கள் பலரை சரஸ்வதி கடாட்சமுடன் உருவாக்கித் தந்தமை பெரும்பேறாகும்.

ஐந்து மணித்தியாலங்கள் எப்படிப் போனது என்று தெரியாதவாறு இருந்த மண்டபம் சோடை போகாதவாறு யோகர் சுவாமிகளின் மங்கள மான்மியம் தேனினைச் சொரிந்து தித்திக்க வைத்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒலி அமைப்பு றொம்ப றொம்ப பிரமாதம். உரைகள் யாவும் அமலனுக்கு அரங்கேற்ற வசீகரமாய் அமைந்தன ஆம் தரமான தவமான பேச்சுகள் இடையில் விடப்பட்ட இடைவேளை விருந்தோம்பலுக்கு இடம் அளித்தாலும் இராகம் தானம் பல்லவி என்ற உருப்படியை அதன் கனதிக்கு வாய்ப்பளித்து வென்றார் அமலன் சுபாஸ் .

# 'நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்'



மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் 'நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' நூல் அறிமுகம் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்க மண்டபத்தில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் ஊடகக் கழகம் ஒழுங்கமைத்த இந்த நிகழ்வினை ஊடகக் கழகத்தின் சிரேஷ்ட பொருளாளர் விரிவுரையாளர் டினேஸ் கொடுதோர் தலைமையேற்று நடத்தினார்.

கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் ஊடக வாழ்க்கைப் பயணம் தொடர்பில் உரையாற்றினார். அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம் 'நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' நூலை அறிமுகம் செய்து, மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் அரசியல் ஒழுக்கம் தொடர்பில் உரையாற்றினார்.



நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் திருமதி மாணிக்கவாசகம் நன்றி தெரிவித்ததோடு பி.மாணிக்கவாசகம் எழுதிய நூல்களின் தொகுப்புகளை யாழ்.பல்கலைக்கழகத்தின் நூலகத்துக்கும் ஊடகக் கற்கைகள் துறை நூலகத்துக்கும் வழங்கினார். நன்றியுரையை ஊடகக் கழகத்தின் செயலாளர் ஆர்.தர்ஷினி வழங்கினார். நிகழ்வில் ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள் ஊடகவியலாளர்கள், மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஊடகக் கற்கைகள் மற்றும் அரசறிவியல் துறை மாணவர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனியார் கல்விக்கு சட்ட நெறிமுறை!

**கொழும்பு, ஜுன் 21**
**தனியார் கல்வி நிறுவனங்கள் விரைவில் சட்ட நெறிமுறைகளுக்கு உட்படும் என்று பிரதிக் கல்வி அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசாங்கம் விரைவில் தனியார் கல்வி நிலையங்களை சட்ட நெறிமுறைக்கு உட்படுத்தவுள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் 65 பில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக்கொள்கின்றன. இவற்றை கண்காணிப்பதற்கு அரசாங்கத்திடம் எதுவித பொறிமுறையுமில்லை. தனியார் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களின் கல்வித் தகைமைகள், சிறப்புத் தேர்ச்சிகள், ஒழுக்கம் என்பன தொடர்பான எந்தவிதத் தகவல்களும் கல்வித் திணைக்களத்திடமில்லை.
சில தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் தமது சொந்த நலன்களுக்காக இனவாத, மதவாத, அரசியல் கருத்துக்களை மாணவர்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். சில தனியார் கல்வி நிலையங்கள் க.பொ.த உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கு 9 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடுகின்றன. இந்த கட்டண அறவீடு மிகவும் அதிகம். சில தனியார் கல்வி நிலையங்களில் ஒழுங்கான மலசலகூட வசதி இல்லை - என்றார். (அ-ம-6)

## கோத்தாவுக்கு நடந்தது ரணிலுக்கு நடக்காது!

### மஹிந்தானந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 21
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வுக்குநடந்ததுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு நடக்காது என பொதுஜனபெரமுன உறுதியளிக்கும் என்றுநாடாளுமன்றஉறுப்பினர்மஹிந்தானந்த அளுத்கமகேதெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்று கோத்தாபயராஜபக்சஎதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளும் துணிவு சஜித்துக்கு இருக்கவில்லை.
இக்கட்டான சூழலில் ரணில் தான் முன் வந்து நாட்டைப் பொறுப்பேற்று இன்று அனைவரும் சுதந்திரமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளார். பெரமுனவினராகிய நாங்கள், இந்த அபிவிருத்தித் திட்டத்தைமுன்னெடுத்துச்செல்லதேவையானஆதரவைவழங்குவோம். கோத்தாபயராஜபக்சவுக்கு நடந்தது ரணிலுக்கும் நடக்க நாம் அனுமதிக்க மாட்டோம். இது அரசியல் பிரச்சினை அல்ல' - என்றார்.
(எ-இ)

## யோகா தின நிகழ்வுகள்

சர்வதேச யோகா தினமான இன்றைய தினம், யாழ் இந்திய கலாசார மத்திய நிலையத்தில் யோகா நிகழ்வுகள் காலை 7 மணிமுதல் முன்னெடுக்கபடவுள்ளன. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத்துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் ராகேஷ் நட்ராஜ் உள்ளிட்ட இந்திய துணைதூதரக அதிகாரிகளும், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உள்ளிட்ட அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ம-125)

## புலம்பெயரிகளின் 'மண்டையைக் கழுவவே' பிரிட்டன் தூதுவராக போகல்லாகம!

### கொழும்பு ஊடகங்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 21
பிரிட்டனில் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்கு மூளைச்சலவை செய்து, அவர்கள் இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வருவதை கையாள்வதற்காகவே ரோகித போகல்லாகம பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகமான டெய்லி மிரர் சுட்டிக்காட்டியுள்ளது.
வெளிநாட்டுத் தூதுவர்களாக முக்கியமான நாடுகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு தற்போது எந்தவித தகைமையும்தேவையில்லை. அரசாங்கத்துக்கோ அல்லது அரசியல்வாதிகளுக்கோ விசுவாசமாக இருந்தால் போதும் என்ற நிலைப்பாடே இப்போதுள்ளது. இவர்களின் நியமனத்தால்நாட்டுக்கோ மக்களுக்கோ எந்த நன்மையும் இல்லை.
தற்போது, பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ள ரோகித போகல்லாகம மகிந்தவின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்துள்ளார். அதன் பின்னர் மைத்திரியின் ஆட்சியில் கிழக்கு மாகாண ஆளுநராக இருந்துள்ளார். இவற்றைத்தவிர வேறு தகைமைகள் எதுவும் அவருக்கு இல்லை. ரோகித போகல்லாகம வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது 2008ஆம் ஆண்டு பிரேசிலுக்கு மேற்கொண்ட பயணத்துக்காக 50 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதுடன், அவர் பல்வேறுபட்ட சர்ச்சைகளில் சிக்கியுள்ளார்.
இவ்வாறிருக்கையில், பிரிட்டனிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வருவதை கையாள்வதற்காகவே ரோகித போகொல்லாகம பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 10 - 1966



மறைவு 20 - 06 - 2023

**இரட்னம் ஸ்ரீபவான்**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்னம் ஸ்ரீபவான் நேற்று (20.06.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற இரட்னம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், கோமதி அவர்களின் பாசமிகு கணவரும், பவித்ரன், துளசிகா, தஜான்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன், ஸ்ரீகுகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிதம்பரப்புளியடி, அல்வாய் மேற்கு, அல்வாய்.
தகவல் :- குடும்பத்தினர். 077 147 0565

## மரண அறிவித்தல்



**செல்வி சபாபதி தங்கப்பொன்**
**(இளைப்பாறிய ஆசிரியை)**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி சபாபதி தங்கப்பொன் அவர்கள் நேற்று (20.06.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சபாபதி - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவபாக்கியம், யோகம்மா, சீவரத்தினம், பராசக்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கனகாம்பிகை, கார்த்திகேசு, கந்தையா, இராசநாயகம் ஆகியோரின் மைத்துனியும், கேதீஸ்வரன், கமலாதேவி, லிங்கேஸ்வரன், சிவனேஸ்வரன், தயாசிங்கம், நல்லலிங்கம், காலஞ்சென்ற தேவராணி மற்றும் தேவகுலசிங்கம், வசந்தகுமார், சோதிலிங்கம், சற்குண தேவி, சிவநாதன் ஆகியோரின் சின்னம்மாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (21.06.2023) புதன்கிழமை பிரதான வீதி, ஈசன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 22.06.2023 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு.
தகவல்: சிவநாதன் (பெறாமகன்)
(CS 2530) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிமீறல் அதிகரிக்கிறது அபராதம்!

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கருத்தில் கொண்டு, விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிரான அபராதத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

வாகனம் செலுத்துவதற்கு முன்னர் சாரதியின் உடல்நலம் மற்றும் மனநிலை ஆகியவற்றை துல்லியமாக பரிசோதிக்கும் இயந்திரம், வெயங்கொடையில் உள்ள தனியார் சாரதி பாடசாலை ஒன்றில் பொருத்தப்பட்டுள்ளது. அதனை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாளுக்கு நாள் வீதி விபத்துக்களும், போக்குவரத்துக் குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. தற்போதுநடைபெற்று வரும் சோதனைகள் தவிர, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாரதிகளின் உடல் நலம் மற்றும் மனநிலையை அளவிடுவதற்கான ஒரு முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். அத்துடன், போக்குவரத்துக்குற்றங்களைக் குறைக்க அபராதத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ம)


## பராமரிப்பாளர் தேவை

திருகோணமலையில் ஆலயக் குருக்கள் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு தேகாரோக்கியம் உள்ள ஆண் ஒருவர் தேவை.
தங்குமிடம், மூன்று வேளை உணவு என்பன வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 071 411 5000

200 YEARS OF EXCELLENCE
A MILESTONE TO CHERISH

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

**Service of Praise & Thanksgiving in commemoration of the Bicentenary of the College**

on

Friday 23rd June 2023 at 4.30 p.m.,

**The Annual Prize Giving**

on

Saturday, 24th June 2023 at 9.30 a.m.

&

**A Cultural Event**

on

Saturday, 24th June 2023 at 5.00 p.m.

*Parents, old boys & well-wishers are cordially invited.*

The Principal,
St. John's College, Jaffna.

(Cr 40174/kn-1)

## மரண அறிவித்தல்

### இராஜேஸ்வரி இராசரட்ணம்

தோற்றம் : 15.11.1950 மறைவு : 20.06.2023



தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி இராசரட்ணம் நேற்று (20.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராமலிங்கம் இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், அமரர்களான கனகசுந்தரம், நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அமரரான சிவானந்தவேல் மற்றும் சரஸ்வதிதேவி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிர்த்திகா, சுரேக்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், விமேஸ், கஜிதரன் ஆகியோரின் மாமியாரும், அபீஷ், அஸ்மிதா, ஆருஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 9595 095
077 1935 539

தகவல்:
இராசரட்ணம் குடும்பத்தினர்.

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2022 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 21.07.2023 (வெள்ளிக்கிழமை), 22.07.2023 (சனிக்கிழமை) திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ். பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்

| | |
|---|---|
| நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | : 20.07.2023 |
| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | : யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| திகதி | : 21.07.2023 (வெள்ளிக்கிழமை)<br>22.07.2023 (சனிக்கிழமை) |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. : 021-222 2601 / 021-222 8602
தொலை நகல் : 021-222 2602
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(cr-40170) (N-1)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்.
## பதவி வெற்றிடங்கள்

1) எமது கிளை நிறுவனமான இல.125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மருந்தாளர் (Pharmacist)
- ❖ மருந்தாளர் பதிவுச் சான்றிதழ் (Registration Certificate) உள்ளவர்கள்.

மருந்தக உதவியாளர் (Pharmacy Assistant)
- ❖ க.பொ.த (உ/த) சித்தி.
- ❖ ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

உதவி நிர்வாக உத்தியோகத்தர் (Assistant Administrative Officer).
பட்டதாரி -05 வருட துறைசார் அனுபவம்
அல்லது
க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியுடன் 10 வருட அனுபவம்).
எதிர்பார்க்கப்படும் முன் அனுபவங்கள்
- ❖ நிர்வாகம் சார்ந்த அனைத்து விடயங்கள்.
- ❖ முகாமைத்துவம் சாரந்த விடயங்கள்.
- ❖ மொழிகளில் சிறந்த ஆற்றல்.
- ❖ கணினியில் கடமையாற்றக்கூடிய திறன்.
- ❖ வைத்தியசாலையொன்றில் கடமையாற்றிய அனுபவம் (மேலதிக தகைமையாக கருதப்படும்).

2) மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

மருந்தக உதவியாளர் (Pharmacy Assistant)
- ❖ க.பொ.த (உ/த) சித்தி.
- ❖ ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

நோயாளர் காவு வண்டி சாரதி (Ambulance Driver)
- ❖ கனரக வாகன அனுமதிப் பத்திரம்.
- ❖ முன் அனுபவம்.

சிரேஸ்ட பிரஜைகள் பராமரிப்பாளர் (Care Taker)
- ❖ முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.
- ❖ வைத்தியசாலைக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பதக்கது.

அனைத்து பதவிகளுக்கும் வயதெல்லை 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 30.06.2023**

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (E-mail) அனுப்பிவைக்க முடியும்.
நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து),
மூளாய், சுழிபுரம்

தொடர்புகளுக்கு :
0212250441 / 0212250771 / 0212250772
E-mail :- moolaii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்புழுவின் தாக்கம் குறைந்தது முல்லையில்

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் படைப்புழுவின் தாக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயப் பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு, கோட்டைகட்டியகுளம், குமிழமுனை, தண்டுவான் ஆகிய பகுதிகளில் படைப்புழுவின் தாக்கம் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்டது. தொடர்ச்சியான நடவடிக்கைகளின் பயனாக இந்த நோய்த்தாக்கம் தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. (ம-125)

# தாவடியில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 21

அமரர் தேவராசா நிரோஜ் ஞாபகார்த்தமாக, விதையனைத்தும் விருட்சமே குழுமம் நடத்தும் குருதிக்கொடை முகாம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி முதல் மாலை 03.30 மணி வரை தாவடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த குருதிக் கொடை முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம-66)

### அல்லைப்பிட்டியில்...

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில், மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிக்கு விரைந்த பொலிஸார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன் அந்த இடத்தை குற்றப்பிரதேசமாக அடையாளப்படுத்தினர். நீதிமன்ற உத்தரவைப் பெற்று இன்றையதினம் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளனர்.

போர்க்காலத்தில் அல்லைப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினதும், கடற்படையினரதும் முக்கியமான சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சோதனைச் சாவடியில் பதிவுகளை மேற்கொண்ட பின்னரே பொதுமக்கள் தீவுப்பகுதிக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### இலங்கையில்...

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது ஆதரவை நான் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கின்றேன். முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அவர்களுக்கு நீதி இன்னமும் கிடைக்கவில்லை. தமிழர்களின் நீதிக்கான போராட்டம் இன்னமும் தொடர்கின்றது. தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் இதுவரை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழர்களின் தனிநாட்டுக்கான போராட்டத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது, முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் சிக்கவைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இந்தப் படுகொலைகளைச் செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பலர் இன்னமும் இராணுவத்தில் உயர் பதவிகளில் உள்ளனர்.

அவுஸ்திரேலிய கிறீன் கட்சியினர் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கண்டிக்கின்றனர். அத்துடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை எங்கள் கட்சி ஆதரிக்கின்றது. அவுஸ்திரேலியாவில் தமிழ் அகதிகளின் அடைக்கலக் கோரிக்கைகளே அதிகளவு நிராகரிக்கப்படுகின்றன. எங்கள் நாட்டிலுள்ள தமிழர்கள் எப்போது வேண்டுமானாலும் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்துடன் தான் வாழ்கின்றனர் என்றார்.

இதேவேளை கனேடிய நாடாளுமன்றத்தில், இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பரவலாக பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றங்களிலும் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### வலிகாமம்...

பட்ட வர்த்தமானி முழுமையாக மீளப்பெறவேண்டும். திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் செய்ததைப் போன்று வலி. வடக்கிலும் செய்யவேண்டும் இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

வலி. வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் வர்த்தமானி 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்தக் காணிகளில் சில பகுதிகள் நல்லாட்சி அரசின் காலத்தில் விடுவிக்கப்பட்டிருந்தன. விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடுசெய்து அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏதுவாக அளவீட்டுப் பணிகள் வலி. வடக்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த டிசெம்பர் மாதம் மற்றும் அண்மையில் இடம்பெற்ற சந்திப்புக்களில் இந்த விடயம் தொடர்பில் பேசியிருக்கின்றோம். வலி. வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து வெளியிட்ட வர்த்தமானியே தவறு. அன்னத்துக் காணிகளையும் ஒரே வர்த்தமானியில் சுவீகரிக்கமுடியாது. அந்தவர்த்தமானியை மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். சம்பூரில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய வர்த்தமானியை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரே வர்த்தமானியில் மீளப்பெற்றார். அதைன்போன்று வலி. வடக்கிலும் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனை ஏற்றுக்கொண்டார். அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சை அறிவுறுத்தியிருந்தார்.

அவர்கள் அவ்வாறு செய்யாமல் விடுவிக்கப்பட்ட காணிகளை மாத்திரம் அளவீடு செய்து அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வலி. வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் கூட இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீதிமன்றமும் அந்த வர்த்தமானியை மீளப்பெறுவதுபற்றி பரிசீலிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியிருந்தது. இவை எல்லாவற்றையும் விடுத்து விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்து அதனை மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிப்பதை ஏற்க முடியாது. தவறான வெளியிடப்பட்ட அந்த வர்த்தமானி முழுமையாக மீளப்பெறப்படவேண்டும் - என்றார். (அ-ஓ,5)

### எனது...

குருந்தூர்மலைக்குப் பயணம் செய்யவுள்ள நிலையில், தனது பாதுகாப்புக்கு அரசாங்கமே பொறுப்பு என்று அவர் தெரிவித்துள்ளார்.

கம்மன்பிலவின் வருகைக்கு வடக்கில் பலத்த எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவருடைய பாதுகாப்புத் தொடர்பில் ஊடகமொன்று கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு தனிநபரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை, சுதந்திரமாக எங்கும் எவரும் சென்றுவருவது ஒருவருடைய ஜனநாயக உரிமை என்று அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குருந்தூர்மலை விகாராதிபதி வணக்கத்துக்குரிய கல்கமுவ சாந்திபோதி தேரருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் அழுத்தம் கொடுத்து வருகிறார். ஜனாதிபதியின் அழுத்தம் காரணமாகவே தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுரா மானதுங்க பதவிவிலகினார். குருந்தூர் மலைக்கு மட்டுமல்ல, நெடுங்கேணி விகாரைக்கும் நான் செல்லவுள்ளேன் - என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியின் அழுத்தத்தால் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் பதவிவிலகியதாக வெளிவந்த கருத்துக்களை ஜனாதிபதி செயலகம் திட்டவட்டமாக மறுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

### யாழில்...

சங்கம் தெரிவித்துள்ளது. விலைக் குறைப்பையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாணின் புதிய விலை 150 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று (நேற்று) நள்ளிரவு முதல் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படுகின்றது. இதேவேளை, ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் (பணிஸ்கள்) விலையில் மாற்றம் இருக்காது. ஏனெனில், ஏனைய மாவட்டங்களை விடவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவற்றின் விலை ஏற்கனவே குறைவாகவே இருந்து வருகின்றது. கோதுமை மாவின் விலை மேலும் குறைகின்றபோது விலைமாற்றம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் - என்றுள்ளது. (அ-ம)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 26 . 07 . 2008 |  | 19 . 06 . 2023 |

## செல்வன் யயந்திரராசன் லேகராஜேஸ்வரன்

(வ / வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - தரம் - 10

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட யயந்திரராசன் வசந்தி தம்பதியரின் அன்பு மகன் செல்வன் லேகராஜேஸ்வரன் நேற்று முன்தினம் (19.06.2023) திங்கட்கிழமை சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஷினேகராஜேஸ்வரன் (வ/வவுனியா தமிழ் ம.ம.வி- தரம் - 09), நித்தியா (வ/வவுனியா தமிழ் ம.ம.வி - தரம் - 06) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, தங்கமுத்து மற்றும் தம்பிஜயா, சாவித்திரிதேவி ஆகியோரின் பேரனும், குருலாபராசன், டேகீஸ்வரராசன் ஆகியோரின் பெறாமகனும், ஒளிஞானசக்தி, சர்வஞானசக்தி, மோகனச்சந்திரன், ஜெயரூபன் ஆகியோரின் மருமகனும், ஒளிநிலவன், காரூரன், சேசன், கிருந்திகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், சியாமளா, மயூரன், செறோமி, ஒலிவியா, யூடித்ஞானஒளி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (217, புகையிரத வீதி, வைரவப்புளியங்குளம்) நாளை (22.06.2023) விளாழக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

217, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

(cs.50936) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்

(Ccs 50876) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கு எதிர்ப்புக்காட்டிய தந்தையைக் கொன்ற மகன்

காதலுக்கு எதிர்ப்புக் காட்டிய தந்தையை மகன் கத்தியால் குத்திப் படுகொலை செய்த சம்பவம் காலியில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- நியாகமை பிரதேசத்திலுள்ள யுவதி ஒருவரை உயிரிழந்தவரின் மூத்த மகன் காதலித்து வந்துள்ளார். இதற்குத் தந்தை கடும் எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளார். இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு வேலை முடிந்து வீட்டுக்கு மதுபோதையில் வந்த தந்தை, காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறுகோரி மகன் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். ஆத்திரமடைந்த மகன் கத்தியால் தந்தை மீது குத்திப் பதில் தாக்குதல் நடத்தியுள்ளார். படுகாயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட தந்தை அங்கு உயிரிழந்துள்ளார். 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார். சந்தேகநபரான 22 வயதுடைய மகனைக் கைது செய்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-22)


## DHL துரித பொதிகள் சேவை

▲ சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் அனுப்பிட முடியும்.
▲ மருந்து பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இதர பொருட்கள் எம் ஊடாக அனுப்பிட முடியும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்



திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. வீதி.
(முட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P: 0777 55 45 28

## நடைபெறுகிறது....

A/L 2K23, 2K24, 2K25

English Medium

- ACC - D.Sam
- B.st - TS.Richi
- Eco - P.Ajanthan

Note:
One & only Institute for Commerce English Medium in Jaffna Peninsula

DMI Jaffna

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

A / L தொழில்நுட்ப பிரிவு
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

இறுதி சந்தர்ப்பம்

- உயிர்முறைமை தொழில்நுட்பம்
- பொறியியல் தொழில்நுட்பம்

மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

ஆரம்பம் 24.06.2023 சனிக்கிழமை காலை - 9.30

தொடர்பு: 077 017 5346

## மேல்மாடி வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் 3 அறைகள், குளியலறை, சமையலறை மற்றும் வீட்டு தளபாடங்கள் உடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(CS/50920 AH-1) 076 454 4023

## வேலையாள்கள் தேவை

சமையல் வேலைக்கும் பூங்கன்றுகள் பராமரித்து விற்பனை செய்வதற்கும் உடனடியாக ஆள்கள் தேவை. (cs 50932) (N-1)

075 944 4601

## விற்பனைக்கு

பாவித்த AC BTU 24000
விலை - 100,000/= (C50937) AH-1

077 199 6117

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை ஒரு லட்சத்தி எண்பதாயிரம் ரூபாய் (180,000/=) மட்டும்.

தொடர்பு: 077 2590 391

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


# மரண அறிவித்தல்

## திரு. சேனாதிராஜா இரத்தினராஜா



யாழ்.வேலணை முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும், நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ் (காலி) உரிமையாளருமான திரு. சேனாதிராஜா இரத்தினராஜா நேற்றுமுன்தினம் (19.06.2023) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - மனோன்மணி தம்பதிகளின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தயாநிதியின் ஆருயிர்க் கணவரும், கஜந்தினி (அவுஸ்திரேலியா), சிந்துஜா (இலங்கை), சைலஜா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹரன்குமார் (அவுஸ்திரேலியா), மதனன் (அவுஸ்திரேலியா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹேமாவின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, செல்லத்துரை, இரத்தினம் மற்றும் நாகராசா (இலங்கை), காலஞ்சென்ற அன்னலெட்சுமி, இராசலெட்சுமி, மற்றும் சரசுமலர், பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும், கண்மணி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சின்னராசா ஆகியோரின் அன்புப் பெறாமகனும், ஸ்ரீஸ்கந்தராஜா (காந்தி - சுவிஸ்), சீதாலெட்சுமி (கலா - கனடா), மகாலெட்சுமி (லதா - இலங்கை), யோகலெட்சுமி (றசிலா - நோர்வே), பவானி (சுவிஸ்), சிவசோதி (சிவா - இலங்கை), நீதிராசா (நீதி - சுவிஸ்) ஆகியோரின் ஆருயிர் சகோதரரும், சாரதாதேவி (சுவிஸ்), செல்வரத்தினம் (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கேமதாஸ் (நோர்வே), ரவிச்சந்திரன் (கண்ணன் - சுவிஸ்), ராஜகுமாரி (ரஜனி - இலங்கை), அன்னசோதி (அமுதா - சுவிஸ்), அன்னலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சுவிஸ்), பிரேமாமலர் (மலர் - சுவிஸ்), ஸ்ரீகாந்தி (ஸ்ரீ - சுவிஸ்), நவநீதன் (நீதன் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜிதா (கனடா), விஜிதன் (சுவிஸ்), சுஜிதா (இலங்கை), சுஜிதன் (நோர்வே), சஜிதா, சஜிதன், கஜிதன், கஜீபன் (கனடா), மயூரன் (நோர்வே), லக்ஷன் (சுவிஸ்), மகிந்தன் (சுவிஸ்), சஜிலா, கிருஷா (இலங்கை), டனுசன், டிவ்யா (நோர்வே), நைனிஷா (சுவிஸ்), சஜந்தன், மகிந்தன் (கனடா), நமிதா, சயந்தன், அஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுவிகரன், சுவிசினி (சுவிஸ்), டனுசிகா, வதுசிகா, டினோஜன் (இலங்கை), நிலக்ஷா, அட்சயன் (சுவிஸ்), நந்துஜா, நந்துஜன், நகித்தன் (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், தனலட்சுமி (கனடா), ருக்குமணிதேவி (சுவிஸ்), சண்முகநாதன் (சுவிஸ்), சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2023) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் (யாழ்ப்பாணம், கந்தர்மடம்) இடம்பெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, இந்துமகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிந்துஜா (மகள்) – +9477 762 8508,
சைலஜா (மகள்) – +94 75 712 9783,
சிவா (சகோதரர்) – +94 77 349 2620

தோற்றம் 10.06.1954 | மறைவு 19.06.2023

(CS/50933)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.